RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANCE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710

மலர்:- 29, 14 ஏப்ரல் 2023 இதழ்:- 51

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

## இன்னும் 10 நாட்களில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் 30வது ஆண்டு விழா


23 ஏப்ரல் 2023 ஞாயிற்றுக்கிழமை

கலைமாமணி ராஜேஸ் வைத்தியாவின் இசைச்சங்கமம் 2023



## இதயம் நிறைந்த இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்!

# ஏலத்தில் விற்கப்பட்ட இலங்கைப் பெண்கள் விசாரணைகளை ஆரம்பித்தது ஐ.நா



ஓமானில் இலங்கை பெண்கள் பாலியல் தொழிலாளர்களாக ஏலத்தில் விடப்பட்ட சம்பவம் குறித்து ஐநா விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. அடிமைத்தனத்தின் தற்போதைய வடிவங்கள் தொடர்பிலான ஐநாவின் விசேட அறிக்கையாளர் டொமொயோ ஒபக்கட்டா மூலம் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை இந்த விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. இது தொடர்பில் பெப்ரவரி ஏழாம் திகதி (22ம் பக்கம் பார்க்க)

# சஜித் அணியை உடைக்கும் ரணிலின் அரசியல் உபாயம்



சிறுபான்மையினக் கட்சிகளின் பிரதிநிதிகளை சில தினங்களுக்கு முன்னர் சந்தித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தான் எடுத்துள்ள முக்கியமான அரசியல் முடிவு ஒன்று குறித்து அவர்களுக்குத் தெரியப்படுத்தியிருக்கின்றார். அடுத்த வருட (2024) முற்பகுதியில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என்பதும், அதில் தான் போட்டியிடப் போவதாகவும் அவர் தெரிவித்திருக்கின்றார். இது தொடர்பாக தேர்தல் திணைக்களத்துடன் ஆலோசனை நடத்த விருப்பதாகவும் அவர் கூறியிருக்கின்றார். ஜனாதிபதித் தேர்தல் தான் அடுத்ததாக நடைபெறும் என்பதும், அதில் ரணில் (19ம் பக்கம் பார்க்க)

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! ஏப்ரல் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
24/7 365
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
MORTGAGE ALLIANCE

THINKING OF

# SELLING OR BUYING A HOME?



## Siva Kandiah
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

20 Years Real Estate Experience

**Team SIVA**
WILL BRING THE BEST RESULTS!

## Piravien Siva
B.Comm. Sales Representative
**Dir: 647-221-5220**
piravien@gmail.com





**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply


HOMELIFE HIGHER STANDARDS


Bus: 416.298.3200
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P 4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY

### Lawrence/ Galloway

Scarborough $499,900
Bedrooms: 4 Washrooms: 2
Close To Shopping, Hospitals

### Finch & Pharmacy

Scarborough $543,900
Bedrooms: 2 Washrooms: 1
Large Open Concept Area

### Yonge/Finch

Toronto $579,000
Bedrooms: 1 Washrooms: 1
Luxurious Bright & Spacious unit

### Bowmanville /Northglen

Clarington $699,000
Bedrooms: 3 Washrooms: 3
Brand New Townhouse

### Eglinton/Markham


Scarborough $699,999
Bedrooms: 3 Washrooms: 2
Low Maintenance Free

### Queens Quay & Lower Sherbourne

Toronto $874,900
Bedrooms: 2 Washrooms: 2
Waterfronts Luxury Corner unit

### Steeles/Mclaughlin

Brampton $1,100,000
Bedrooms: 3 Washrooms: 3
A Quiet Family Neighborhood


### River Street & Highway 12

Brock $1,350,000
Bedrooms: 5 Washrooms: 4
Walkout Basement

### Meadowvale / 401

Scarborough $1,998,786
Bedrooms: 4+3 Washrooms: 5
Open Concept Layout.

### Sandalwood & Richvale

Brampton $675,000
Bedrooms: 3 Washrooms: 2
Call for more info

### Eglinton/Sloane

Toronto $539,000
Bedrooms: 1 Washrooms: 1
Doubble Closet & Open Balcony.

### Danforth & Eglinton Ave


Toronto $456,500
Bedrooms: 1 Washrooms: 1
Open Concept With Modern Kitchen

### Keele/Sheppard

Toronto $810,000
Bedrooms: 3 Washrooms: 2
Bungalow-Raised Excellent Property

### Mccowan & Ellesmere
FOR LEASE

Scarborough $3,200
Bedrooms: 3 Washrooms: 1
Hardwood Floors Throughout

### Liverpool & Commerce S
FOR LEASE

Pickering $2,700
Bedrooms: 3 Washrooms: 1
Close To Parks

### Birchmount/Ellesmere
FOR LEASE

Scarborough $2,400
Bedrooms: 1+1 Washrooms: 1
Open Concept Unit With Parking

## PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்புவோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் சர்வதேச தராதரங்களிற்கு ஏற்றதாக காணப்பட வேண்டும் -அமெரிக்கா



புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் சர்வதேச தராதங்களை பூர்த்தி செய்வதாக காணப்பட வேண்டும் என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜீலி சங் தெரிவித்துள்ளார்.

காலவாதியாகிப் போன சட்டமான பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு பதிலான பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் குறித்த புதிய கலந்துரையாடல்கள் இடம் பெறுகின்றன என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பழைய பயங்கரவாத தடைச் சட்டத்தை மாற்றியமைத்து அதனை நீக்கப் போவதாக ஜனாதிபதியும் அரசாங்கமும் வெளியிட்டுள்ள கருத்துக்களை நாங்கள் வரவேற்கின்றோம் எனவும் அமெரிக்க தூதுவர் தெரிவித்துள்ளார்.

இந்த சட்டத்தை மீளாய்விற்கு உட்படுத்தும் போது அனைத்து பங்குதாரர்களுடனும் நேர்மையான வலுவான கலந்தாலோசனைகள் இடம் பெறும் என எதிர்பார்க்கின்றோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் ஏனெனில் இது அவ்வாறான சட்டம் எனவும் ஜீலி சங் குறிப்பிட்டுள்ளார்.

இது இலங்கையின் வரலாற்றில் மிக முக்கியமான தருணம் ஆகவே அரசாங்கம் பல்வேறு தரப்பட்ட பங்குதாரர்களின் கருத்துக்களை செவிமடுப்பதற்கு நேரத்தை செலவிடும் என நாங்கள் கருதுகின்றோம், எனவும் தெரிவித்துள்ள அவர் புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் சர்வதேச தராதரங்களை பூர்த்தி செய்வதாகவும் இலங்கை மக்களின் தேவைகளை உண்மையில் பூர்த்தி செய்வதாகவும் காணப்பட வேண்டும் எனவும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இலங்கையில் இராணுவத் தளத்தை அமைக்கும் நோக்கம் தமது நாட்டுக்கு இல்லை என அமெரிக்கத் தூதுவர் ஜீலி சுங் தெரிவித்துள்ளார். அமெரிக்காவின் உயர்மட்ட பாதுகாப்பு அதிகாரியின் இலங்கை விஜயம் குறித்த கேள்விக்கு பதிலளித்த போதே அவர் இவ்வாறு கூறினார். இந்தோ – பசுபிக் பாதுகாப்பு விவகாரங்களுக்கான முதன்மை பிரதி பாதுகாப்புச் செயலாளர் ஜெடிடியா றோயல் தலைமையிலான அமெரிக்க உயர்மட்ட பாதுகாப்புக் குழு பெப்ரவரி மாதம் இலங்கைக்கு வந்திருந்தது. உயர்மட்ட அமெரிக்கப் பாதுகாப்பு அதிகாரிகளை உள்ளடக்கிய குறித்த குழு, அமெரிக்க விமானப்படையின் இரண்டு சிறப்பு விமானங்களில் நாட்டை வந்தடைந்தது.

பிராந்திய பாதுகாப்பு, இலங்கை இராணுவத்தில் சீர்திருத்தங்கள், கடல் சார் கள விழிப்புணர்வு நடவடிக்கை தொடர்பான விவகாரங்கள் குறித்து கலந்துரையாடுவதற்காக இக் குழு இலங்கைக்கு வந்திருந்தது. இந்த விஜயம் இலங்கையில் ஓர் இரா ணுவத் தளத்தை அமைக்க அமெரிக்கா நடவடிக்கை எடுக்கும் என்ற ஊகத்தை தூண்டியது.

இந்நிலையில் இந்த விடயம் தொடர்பாக கருத்து வெளியிட்டிருந்த அமெரிக்கத் தூதுவர் ஜீலி சுங், இலங்கையில் இராணுவத்தளத்தை அமைக்கும் நோக்கம் தமது நாட்டுக்கு இல்லை என கூறினார்.அத்துடன் சோபா ஒப்பந்தத்தை புதுப்பிக்கவோ அல்லது மீள் மதிப்பீடு செய்யவோ அமெரிக்கா எந்த முடிவும் எடுக்கவில்லை என்றார்.

இது இவ்வாறிருக்க இலங்கையின் கொடூரமான பயங்கரவாத தடுப்புச் சட்டத்துக்கு மாற்றீடு செய்ய முன்மொழியப் பட்டிருக்கும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் வெளிப்படைத் தன்மை இல்லையென்று ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கை மற்றும் மாலைத்தீவுக்கான தூதுவர் டெனில் சைபி இந்த விமர்சனத்தை வெளியிட்டுள்ளார்.

ஜி. எஸ். பி. பிளஸ்வரிச் சலுகைகளை வழங்க வேண்டுமா இல்லையா என்பது குறித்து ஐரோப்பிய ஒன்றியம் எடுக்க வேண்டிய முடிவுக்கு முன்னதாகவே இந்த புதிய மாற்றுச் சட்டம் முன் வைக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய சட்டத்தை ஏற்காது வரிச்சலுகை ஏற்பாட்டை ஐரோப்பிய ஒன்றியம் நீடிக்கத் தவறினால், இலங்கைக்கு 50 கோடி டொலர் மதிப்பிலான வர்த்தக சலுகை கிடைக்காமல் போகக் கூடும். ஐரோப்பிய ஒன்றியம் பயங்கரவாத அமைப்புகளை அடையாளப்படுத்தும் போது நீதித்துறை மற்றும் பொது மக்களின் தகவல்களின் அடிப்படையிலான செயல் முறையால் முன்னெடுக்கப்படுகிறது. எனினும், இலங்கையில் இந்த செயல் முறை மிகவும் குறைவான வெளிப்படைத் தன்மையை கொண்டுள்ளது.

# வெடுக்குநாறி மலை விவகாரம்:-
# இந்தியத் தூதுவரிடம் முறையிட்ட சைவ அமைப்புக்கள்

இந்திய தூதுவருடனான சந்திப்பு திருப்தியாக அமைந்ததாகவும் வெடுக்குநாறி ஆலய விவகாரத்துக்கு விரைவில் தீர்வு கிடைக்க ஆவன செய்வார் என எதிர்பார்ப்பதாகவும் வெடுக்குநாறி ஆலய நிர்வாக உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள இந்திய தூதுவராலயத்தில் வெடுக்குநாறி ஆலய நிர்வாகத்தினர் உட்பட வவுனியாவை சேர்ந்த இந்து அமைப்புக்களின் பிரதிநிதிகள் கொழும்பு இந்துமாமன்றம் பிரதிநிதிகள் உள்ளடங்கிய குழு இந்திய தூதுவர் கோபால் பாக்லேயை சந்தித்திருந்தது.



சுமார் ஒரு மணி நேரம் இடம் பெற்ற இக் கலந்துரையாடலில் வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலய விக்கிரகங்கள் சேதமாக்கப்பட்டமை மீண்டும் விக்கிரகங்கள் வைப்பதற்கு தொல்பொருள் திணைக்களம் ஏற்படுத்தும் தடைகள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

எல்லையோர கிராமங்களில் நடைபெறும் ஆக்கிரமிப்புக்களுடன் சைவ அடையாளங்கள் அழிக்கப்படுகின்றமை தொடர்பாகவும் இதன் போது இந்திய தூதுவருக்கு ஆவணங்கள் ஊடாக தெளிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், தம்மாலான செயற்பாடுகளை மேற்கொள்ள தாம் முனைப்பு காட்டுவோம் என இந்திய தூதுவர் குறித்த குழுவிடம் தெரிவித்ததாக வெக்குநாறி ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்

2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544

# WORK WITH THE BEST TEAM GET YOUR HOME SOLD!

#1 HOMELIFE TEAM IN ONTARIO

SIVA & JOY

KNOWLEDGE • EXPERIENCE • SUCCESS

## ASSIGNMENT SALE
### PINNACLE TORONTO EAST CONDOS




$589,900





- 1 Bedroom+Den
- 1 Bathroom
- 651 Sq Ft
- 1 Parking+ 1 Locker

## ASSIGNMENT SALE
### THE LANDING CONDOS



**Whitby**

Victoria St W/Brock St S

- 2 Bedroom+Den
- 2 Bathroom
- 854Sq Ft
- 1 Parking+ 1 Locker



**$760,000**

Occupancy September 25 2023


- ✔ Exciting opportunity to live near Whitby's waterfront
- ✔ Chance to live in a beautifully scaled condominium located by the lake
- ✔ Only a 3-minute stroll to the Whitby GO Station
- ✔ Quick access to Highway 401 and 412 allowing for easy commutes

# UNION CITY in MARKHAM





## DEPOSIT STRUCTURE


$10,000 at Signing
Balance to 5% in 30 Days
5% on April 1, 2024
2.5% on October 1,2024
2.5% on April 1, 2025
5% on Occupancy



## FROM MID $400S




Minutes away from CF Markville Mall
Highway 404 just 4 minutes away
Highway 407 just 2 minutes away
Just steps away from Unionville GO Station
Close to York University Markham Campus



**SASIKUMAR SHANMUGANATHAN**
BROKER

**SIVA SHANMUGANATHAN**
BROKER

**JOY SELVANAYAGAM**
BROKER

**416.709.5000** **416.545.7482**

**www.futuregtahomes.com**

HOMELIFE HIGHER STANDARDS

HomeLife/Future Realty Inc., Brokerage Bus: 905.201.9977

Independently Owned And Operated

# யாழ்.உதயன் பத்திரிகை நிறுவனத்துக்குள் கிறிஸ்தவ சபையைச் சேர்ந்த கும்பல் அட்டகாசம்

யாழ்ப்பாணத்தில் உதயன் பத்திரிகை நிறுவனத்தினுள் கிறிஸ்தவ சபையை சேர்ந்த போதகர் தலைமையில் சிறுவர்கள் பெண்கள் உள்ளடங்கிய கும்பல் ஒன்று அத்துமீறி நுழைந்து அடாவடியில் ஈடுபட்டுள்ளது. அச்சுவேலி பகுதியில் உள்ள வீடொன்றினுள் கிறிஸ்தவ மத போதகரின் தலைமையிலான கும்பல் ஒன்று அத்துமீறிநுழைந்து வீட்டில் இருந்த வயோதிப பெண் உள்ளிட்ட இருவர் மீது தாக்குதல் மேற் கொண்டனர் என அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், போதகர் , அவரது மகன் உள்ளிட்ட மூவரை கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்த பின்னர் பொலிஸ் பிணையில் விடுவித்துள்ளனர். அது தொடர்பில் கடந்த 09 ஏப்ரல் 2023 ஞாயிற்றுக்கிழமை உதயன் பத்திரிகையில் செய்தி வெளியாகி இருந்தது.

செய்தி வெளியாகிய நிலையில் அச்சுவேலியில் இருந்து தமது சபைக்கு சொந்தமான சொகுசு பேருந்து மற்றும் பட்டா வாகனம் என்பவற்றில் யாழ்.நகர் பகுதியில் உள்ள உதயன் அலுவலகத்திற்கு வருகை தந்து அலுவலகத்தினுள் அத்துமீறி நுழைந்து அடாவடியில் ஈடுபட்டதுடன் நிறுவனத்தில் வேலை செய்தவர்களையும் தமது கையடக்க தொலைபேசிகளில் வீடியோ , 



புகைப்படங்கள் எடுத்தும் அச்சுறுத்தும் வகையில் ஈடுபட்டனர்.

அது தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸாருக்கு உதயன் நிறுவனத்தினர் அறிவித்து பொலிஸார் சம்பவ இடத்திற்கு வருகை தர முதல் அக்கும்பல் தமது சொகுசு பேருந்திலும் பட்டா வாகனத்திலும் சம்பவ இடத்தில் இருந்து தப்பி சென்றுள்ளனர். அதனை அடுத்து உதயன் பத்திரிக்கை நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# தமிழர்களின் இருப்பைப் பாதுகாப்பதற்காக பொதுக்கட்டமைப்பு உருவாக்கம்!



அரசாங்கத்தின் அடக்கு முறைகளுக்கு எதிராகவும் தமிழர்களின் இருப்பை பாதுகாப்பதற்குமான பொதுக் கட்டமைப்பு ஒன்று வவுனியாவில் 08 ஏப்ரல் 2023 சனிக்கிழமை உருவாக்கப் பட்டது.

தமிழர் பகுதிகளில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும் அரசாங்கத்தின் நெருக்கடிகள் மற்றும் பௌத்த மயமாக்கல் போன்ற செயற்பாடுகளை தடுத்து நிறுத்துவதற்கான பொறிமுறைகளை உருவாக்குவது, தொடர்பாக அரசியல் கட்சிகள் மற்றும் பொது அமைப்புக்களுடனான கலந்துரையாடல் ஒன்று வவுனியா தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது.

இதன்போது குறித்த விடயங்கள் தொடர்பாக எதிர்வினையாற்றுவதற்காக இரு கட்டமைப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளது. குறிப்பாக தமிழர் பகுதிகளில் முன்னெடுக்கப்படும் ஆக்கிரமிப்புக்கள் மற்றும் பௌத்த மயமாக்கல் செயற்பாடுகள், காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம், வனவளத் திணைக்களத்தால் காணிகள் ஆக்கிரமிக்கப்படுகின்றமை, தொல்பொருள் திணைக்களத்தின் ஆக்கிரமிப்புகள் தொடர்பான தரவுகளை சேகரித்து அவற்றை துல்லியமாக இனம் காண்பதற்காக 7 பேர் கொண்ட கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டது.

அத்துடன் அரசின் அடக்குமுறைகளுக்கு எதிராக வடகிழக்கு தழுவிய ரீதியில் மாபெரும் சாத்வீகப் போராட்டம் ஒன்றை முன்னெடுப்பதற்காக மற்றொரு கட்டமைப்பும் உருவாக்கப்பட்டது. குறித்த கலந்துரையாடலில் மதகுருமார்கள், தமிழ் அரசுக்கட்சி, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம், தமிழ் மக்கள் விடுதலை கழகம், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், புதிய ஜனநாயக மாக்ஸ்சிச லெனினிச கட்சி, தமிழர் விடுதலை கூட்டணி, ஐக்கிய தேசிய கட்சி, ஸ்ரீதமிழ் ஈழ விடுதலை இயக்கம் போன்ற அரசியல் கட்சிகளும், பொது அமைப்பினரும் கலந்து கொண்டனர்.

# இலங்கை தொடர்பில் சீனாவின் நம்பிக்கைக்குரிய அறிகுறியை அமெரிக்கா வரவேற்பு!

இலங்கைக்கான கடன் மறுசீரமைப்பில் பங்கேற்பதில் சீனாவின் சில நகர்வுகளை பார்த்ததாகவும் சீனா பங்கேற்பது நம்பிக்கைக்குரிய அறிகுறி என்றும் அமெரிக்க திறைசேரி செயலாளர் ஜேனட் யெல்லன் தெரிவித்தார்.

சில கடன் மறுசீரமைப்புகளில் சீனா விரைவாக செல்ல வேண்டும் என்று யெல்லன் முன்னர் கூறியிருந்த நிலையில், இந்தவாரம் ஆரம்பமாகவுள்ள சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் வசந்த காலக் கூட்டங்களுக்கு முன்னரே யெல்லன் இந்த விடயத்தை ஏ.எப்பி செய்தி சேவையிடம் தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கியாளர்கள், நிதி அமைச்சர்கள் மற்றும் 180க்கும் மேற்பட்ட உறுப்பு நாடுகளைச் சேர்ந்த பங்கேற்பாளர்கள் வொஷிங்டனில் இடம்பெறவுள்ள கூட்டத்தில் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

புதிதாக உருவாக்கப்பட்ட உலகளாவிய இறையாண்மைக் கடன் வட்டமேசை இந்த வாரம் ஒன்று கூடும் போது அதன் முன்னிலையில் கலந்துரையாடல்கள் தொடரும் என்றும் யெல்லன் குறிப்பிட்டார்.

கடன் மறுசீரமைப்பின் முக்கிய கூறுகள் குறித்து தாங்கள் பயனுள்ள தொழில்நுட்ப கலந்துரையாடல்களை நடத்தி வருவதாக தெரிவித்த அவர், மறுசீரமைப்பில் சீனா பங்கேற்று வருவதாகவும் மேலதிக மேம்பாடுகளுக்காக நாங்கள் அனைவரும் சீனாவுக்கு அழுத்தம் கொடுப்போம் என்றார். கடன் மறுசீரமைப்புக்காக ஜி20 பொதுவான கட்டமைப்பின் வேகமான மற்றும் கணிக்கக்கூடிய செயல்பாட்டுக்கு வொஷிங்டன் தொடர்ந்து அழுத்தம் கொடுக்கும் என்று குறிப்பிட்டார்.

அடுத்த வாரம் இடம்பெறவுள்ள பங்குதாரர்களின் கூட்டங்களில் முக்கிய மாற்றங்கள் அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உலகளாவிய வளர்ச்சி குறைந்து வருவதால், கடுமையான கடன் சுமைகள் மற்றும் பலவீனமான முதலீட்டினால் உந்தப்பட்ட மந்தமான வளர்ச்சியை எதிர்கொள்ளும் ஏழைப் பொருளாதாரங்களுக்குக் கடினமாக அமையும் என்று உலக வங்கி முன்னரே எச்சரித்தது.

காலநிலை மாற்றம் போன்ற உலகளாவிய சவால்களை மறுசீரமைக்கவும் சந்திக்கவும் கடன் வழங்குபவர்களின் உந்துதலுக்கு மத்தியில், உலக வங்கியின் பரிணாம வளர்ச்சி குறித்து விவாதத்தின் முக்கிய தலைப்பு இருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

உலக வங்கிக் குழுமத்தின் மிகப்பெரிய பங்குதாரராக அமெரிக்கா உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஈஸ்டர் தாக்குதலுக்கான நீதி?

ஈஸ்டர் தாக்குதல் இடம் பெற்று மூன்று வருடங்களை கடந்து விட்டது. 2019 ஏப்ரல் 21ஆம் திகதி மேற்படி தாக்குதல் இடம்பெற்றது. தாக்குதல் இடம் பெற்று சில தினங்களின் பின்னர் சர்வதேச இஸ்லாமிய பயங்கரவாத அமைப்பான ஐ.எஸ்.ஐ.எஸ். தாக்குதலுக்கு உரிமை கோரியிருந்தது.

இவ்வாறானதொரு தாக்குதல் இடம் பெறுவதற்கான அறிகுறிகள் உண்டென்னும் முன்னெச்சரிக்கையை இந்திய உளவுத்துறை வழங்கியதாக அப்போது செய்திகள் வெளியாயிருந்தன.

அப்போது பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவும் முன் கூட்டிய தகவல்கள் இருந்தன ஆனால் சிறிலங்கா அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை எடுப்பதில் பின்னடைந்திருந்ததாக குறிப்பிட்டிருந்தார். 280இற்கு மேற்பட்டவர்களின் கொலைக்கு காரணமான குறித்த தாக்குதல் தொடர்பில் பல்வேறு சர்ச்சைக்குரிய கருத்துக்கள் இப்போதும் முன் வைக்கப்பட்டு வருகின்றன.

கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபாலவிற்கு தொடர்பிருப்பதாக நீதிவான் நீதிமன்றம் சுட்டிக்காட்டியது. இந்த ஆண்டு இந்த விசாரணையை முன்னெடுத்த இலங்கை உச்ச நீதிமன்றம் மைத்திரிபால சிறிசேன பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டுமென்று உத்தரவிட்டது.

மைத்திரிபால சிறிசேனவின் மீதான பிரதான குற்றச்சாட்டு பாதுகாப்பு விவகாரங்களுக்கு பொறுப்பானவரென்னும் வகையில் உரிய நவடிக்கை எடுக்கத் தவறியிருக்கின்றார் என்பதுடன் முன்கூட்டிய தகவல்கள் இருந்தும் அதனை மறைத்து தன்னிச்சையாக செயல்பட்டிருக்கின்றார் என்பது மட்டுமே. ஆனால் ஏன் அவ்வாறு செயல்பட்டார் என்பதற்கான பதில்கள் கண்டறியப்படவில்லை.

இந்த நிலையில் இது போன்ற சம்பவங்கள் இனிமேல் நாட்டில் இடம்பெற அனுமதிக்கப் போவதில்லையென்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கின்றார். விசாரணைகள் சுயாதீனமாக இடம் பெறுவதாகவும் தெரிவித்திருக்கின்றார்.

இலங்கையின் இறுதி யுத்தத்தின் போது இடம்பெற்றதாக கூறப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களுக்கே இதுவரையில் முறையான விசாரணைகளை முன்னெடுப்பதில் அரசாங்கம் தோல்விடைந்திருக்கின்றது.

இந்த விசாரணையை முன்னெடுப்பது இலகுவான விடயம் ஏனெனில் யுத்தத்தை வழி நடத்தியவர்கள் உத்தரவிட்டவர்கள் அனைவருமே கொழும்பில் தான் இருக்கின்றனர். ஆதாரங்களை திரட்டுவது மற்றும் சந்தேகநபர்களை விசாரணை செய்வது மிகவும் இலகுவானது.

அனைத்தையும் அரசாங்கம் தனது முழுமையான கட்டுப்பாட்டுக்குள் உள்ளடக்கி விடயங்களை முன்னெடுக்க முடியும். ஆனால் இன்றுவரையில் குறித்த விசாரணையில் சிறிதளவு முன்னேற்றம் கூட இடம் பெறவில்லை. இந்த பின்புலத்தில் நோக்கினால் ஈஸ்டர் தாக்குதலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எவ்வாறு நீதி கிடைக்கும்.

ஈஸ்டர் தாக்குதலில் சம்மந்தப்பட்டிருப்பவர்கள் இலங்கை அரசாங்கத்தினால் அணுக முடியாத தூரத்தில் இருக்கும் ஒரு சர்வதேச பயங்கரவாத அமைப்பு. அமெரிக்காவிற்கே மிகவும் சவாலான அமைப்பு. இந்த நிலையில் இந்தத் தாக்குதலின் உண்மையான சூத்திரதாரிகளை விசாரணைக்குள்ளாக்குவது என்பது முடியாத காரியம்.

ஆனால் இவ்வாறானதொரு தாக்குதல் தொடர்பில் முன் கூட்டிய தகவல்கள் இருந்தும் ஏன் இதனை அப்போதைய நிர்வாகம் கண்டும் காணாமல் விட்டிருந்தது. அது உண்மையா? அவ்வாறாயின் கண்டும் காணாமல் விட்டதால் நன்மையடைந்தவர்கள் யார்? எவ்வாறான நன்மைகள்? இந்தக் கோணத்தில் விடயங்களை ஆராய்ந்தால் சில புதிர்களை அவிழ்க்க முடியும். ஆனால் அவ்வாறான முயற்சிகளும் இன்றுவரையில் சரியாக இடம்பெற்றதாகவும் தெரியவில்லை.

மைத்திரிபால சிறிசேன நிச்சயமாக தனது சொந்த புத்திலியிருந்து விடயங்களை அனுகியிருப்பாரா என்பது சந்தேகமே! ஆனால் ஒரு விடயம் உண்மை.

ஈஸ்டர் தாக்குதல் ரணில் மைத்திரி அரசாங்கத்தை முக்கியமாக ரணில் விக்கிரமசிங்கவை பின்னுக்கு தள்ளியது, கோட்டாபய ராஜபக்ஷவின் செல்வாக்கை இரட்டிப்பாக்கியது. அவரது வெற்றியை மிகவும் இலகுவாக்கியது.

(22ம் பக்கம் பார்க்க)

# வலுகட்டாயமாக விக்கிரகங்கள் வைக்க முடியாது என்றால் விக்கிரகங்களை உடைக்க ஜனாதிபதி எவ்வாறு அனுமதியளித்தார்?

விக்கிரகங்களை யாரும் வலுக்கட்டாயமாக வைக்க முடியாது என்று கூறுகின்ற ஜனாதிபதி ஏற்கனவே உள்ள விக்கிரகங்களை உடைப்பதற்கு எவ்வாறு அனுமதிகளை கொடுத்துள்ளார் என்று பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.



அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் இன்றைய நாட்டின் ஜனாதிபதி சொல்லுகின்றார் யாரும் விக்கிரகங்களை வலுக்கட்டாயமாக வைக்க முடியாது என்று குறிப்பிடுகிறார்.

இவ்வாறு கூறுகின்ற ஜனாதிபதி ஏற்கனவே பாரம்பரியமாக வழிபட்டு வந்த விக்கிரகங்களை உடைப்பதற்கான அனுமதிகளை கொடுக்கின்றார். குறிப்பாக குறுந்தூர் மலையிலே நீதிமன்றம் போட்ட கட்டளையை மீறி விகாரை அமைக்கப்படுகின்றது.

வெடுக்குநாறி மலையிலே விக்கிரகங்கள் உடைக்கப்பட்டுள்ளன இவ்வாறு தமிழர் வழிபாட்டிடங்களில் விகாரை அமைப்பதற்கு அவர் அனுமதித்துள்ளார்.

சிங்கள பௌத்த பேரினவாதம் எதைச் செய்தாலும் அவர் மௌனமாக இருப்பார் ஆனால் தமிழர்கள் எதையும் போய் செய்யக்கூடாது என்றும் அவ்வாறு செய்தால் அது வலுக்கட்டாயம் என்றும் தடுத்து வருகின்றனர்

இவ்வாறான ஒரு நெருக்கடிக்குள் தான் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் நாங்கள் எங்களுக்கான சுயாட்சியை நிறுவுவதற்காக் நீண்ட நெடுங்காலமாக போராடி வருகின்றோம் அதற்காக பல்லாயிரக்கணக்கான உயிர்களை விலையாக கொடுத்திருக்கின்றோம்.

பலரை இழந்திருக்கின்றோம் பெறுமதி மதிப்பட முடியாத சொத்துக்களை இழந்திருக்கின்றோம் இதையெல்லாம் கடந்தும் இந்த மண்ணில் எமக்கான விடுதலை நோக்கிய பயணத்தில் ஒன்று சேர வேண்டும் என்று என்று குறிப்பிட்டார். எமது அடையாளங்களை நாங்கள் பேண வேண்டும் என்பது எமக்கு முன்னால் உள்ள வரலாற்று ரீதியான கடமையாகும்

மக்களை ஒரு குழப்பகரமான நிலையில் வைத்திருக்க வேண்டுமென்பதற்காக இளைஞர்களிடத்திலே ஒரு புதிய விதமான பிரச்சனை உருவாக்கப்பட்டு இருக்கிறது. அதாவது இன்று போதைப் பொருள் பாவனை இப்பொழுது போதைப் பொருள் பாவனையினால் பல் வேறுபட்ட வன்முறை சம்பவங்கள் இடம் பெற்று வருகின்றன.

குறிப்பாக தாய் தந்தை பிள்ளைகளை கொலை செய்தல் போதைப் பொருள் பாவனைகளால் கலாச்சார சீரழிவு என பல்வேறு விதத்திலே எங்களுடைய இளம் சமூகம் சீரழிக்கப்படுகின்றது

அதைவிட தற்போது பயங்கரவாத தடைச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கின்றது இதை பலர் எதிர்க்கின்றனர் குறிப்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா இதேபோல பலரும் எதிர்த்திருக்கின்றார்கள் உலக நாடுகள் பல எதிர்த்திருக்கின்றன இந்த அரசாங்கம் கொண்டுவரப் போகின்ற பயங்கரவாத தடைச் சட்டம் என்பது மிக மோசமானது.

ஒன்று கூடுவதோ அல்லது உரிமைகள் பற்றி பேசுவதற்கோ முடியாது எங்களது (22ம் பக்கம் பார்க்க)

## வடக்கில் அத்துமீறி வழிபாட்டுச் சின்னங்கள் வைக்க முடியாது- ரணில்

வடக்கில் வாழும் அனைத்து இன மக்களுக்கும் வழிபாட்டு உரிமை உண்டு அதை எந்தத் தரப்பும் கேள்விக்கு உட்படுத்த முடியாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

எனினும் அத்துமீறி வழிபடவோ அல்லது வழிபாட்டுச் சின்னங்கள் வைக்கவோ முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கில் மத ரீதியில் அண்மைக் காலத்தில் எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு விரைந்து தீர்வு காணப்படும்.

இந்த பிரச்சினைகளை வைத்து அல்லது பிரச்சினைகளை மேலும் தூண்டிவிட்டு எவரும் அரசியல் இலாபம் தேட முயலக் கூடாது. நீதிமன்றின் தீர்ப்புக்கமைய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும். எனினும், வடக்கில் மத ரீதியில் எழுந்துள்ள பிரச்சினைகளை வளர விடாமல் விரைந்து தீர்வு காண்போம் என குறிப்பிட்டுள்ளார்.



தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

Math & Physics Tutoring

(For High School Students)

Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12

கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)

சி.இளஞ்செழியன்

Tel: 416-524-0424



# புத்தரைக் காணவில்லை!
## நோர்வே தமிழர் பொலிஸில் முறைப்பாடு!

வவுனியா, செட்டிகுளம் பகுதியில் வைக்கப்பட்டிருந்த புத்தரை காணவில்லை என அப் பகுதியில் தற்போது வசித்து வரும் தமிழர் ஒருவர் முறைப்பாடு செய்துள்ளார். வவுனியா, செட்டிகுளம், பழைய புகையிரத நிலையத்திற்கு முன்பாக ஞாயிற்றுக்கிழமை (09) புத்தர் சிலை ஒன்று வைக்கப்பட்டிருந்தது.

அது ஞாயிற்றுக்கிழமை மாலையே அகற்றப்பட்டிருந்ததுடன் அப்பகுதியை சேர்ந்த ஒருவர் வைத்ததாக தெரிவிக்கப்பட்டிருந்தது.இந்நிலையில் திங்கட்கிழமை குறித்த நபர் தானே தனது காணியில் புத்தர் சிலையை வைத்ததாகவும் அதனை காணவில்லை எனவும் செட்டிகுளம் பொரிஸாரிடம் முறையிட்டுள்ளார்.



குறித்த நபர் கடந்த 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நோர்வேயில் இருந்து இலங்கைக்கு வருகை தந்து நொச்சியாகம பகுதியைச் சேர்ந்த பெரும்பான்மையின பெண் ஒருவரை திருமணம் செய்திருந்ததுடன், கடந்த பெப்ரவரி மாதமளவில் செட்டிகுளத்திற்கு வந்து தங்கியுள்ளார். இந்நிலையில் குறித்த விடயம் தொடர்பில் செட்டிகுளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# கொழும்பில் இருந்து இரகசியமான முறையில் கப்பலில் அமெரிக்கா செல்ல முயன்ற 4 பேர் சூயஸ் கால்வாய் பகுதியில் கண்டு பிடிப்பு!

கொழும்பு துறைமுகத்தில் இரகசியமான முறையில் கப்பல் ஒன்றில் ஏறியதாகக் கூறப்படும் நான்கு இளைஞர்கள், கப்பல் சூயஸ் கால்வாயை கடந்து கொண்டிருந்தபோது கண்டு பிடிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை பொலிஸாரிடம் 11 ஏப்ரல் 2023 ஒப்படைக்கப்பட்ட குறித்த இளைஞர்கள், காலி பதில் நீதவான் பிரேமரத்ன திரானகம முன்னிலையில் மறுநாள் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து, ஏப்ரல் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டிருந்த, லைபீரியாவில் பதிவு செய்யப்பட்ட கப்பல் ஒன்றில் நான்கு இளைஞர்களும் இரகசியமான முறையில் கடந்த மாதம் 24 ஆம் திகதி ஏறியுள்ளனர்.

அமெரிக்காவை நோக்கிச் சென்ற குறித்த கப்பல் சூயஸ் கால்வாயை கடந்துகொண்டிருந்த போது, அதிலிருந்த இளைஞர்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் கப்பல் ஊழியர்களாக மாறுவேடத்தில் இருந்தமையும் தெரியவந்துள்ளது.

குறித்த நான்கு இளைஞர்களையும் இலங்கை அதிகாரிகளிடம் ஒப்படைப்பதற்காக சீனாவில் இருந்து இலங்கை நோக்கி வந்துகொண்டிருந்த மற்றுமொரு கப்பலில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

சீன கப்பலின் அதிகாரிகள் காலி துறைமுகத்திற்கு அப்பாலுள்ள கடற்பரப்பில் நான்கு இளைஞர்களையும் இலங்கை அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளனர். குறித்த இளைஞர்கள் முல்லைத்தீவு, சுன்னாகம், ஊர்காவற்றுறை, வல்வெட்டித்துறையை சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

# புதிய பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம், 13வது திருத்தம் இராஜதந்திரிகளுக்கு அரசாங்கம் விளக்கம்!



அரசாங்கத்தினால் முன் மொழியப்பட்டுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் குறித்த நிலைப்பாடு மற்றும் 13ஆவது அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு அரசாங்கம் விளக்கமளித்துள்ளது.

உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறையை ஸ்தாபித்தல் உட்பட நல்லிணக்கத்திற்காக அரசாங்கம் முன்னெடுத்துள்ள முயற்சிகள் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

கொழும்பை தளமாகக் கொண்ட இராஜதந்திரிகளுடன் 10 ஆம் திகதி திங்கட்கிழமை இடம் பெற்ற சந்திப்பின் போது வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி , இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் சாகல ரத்நாயக்க ஆகியோரால் இவ்விடயங்கள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

இதன் போது உரையாற்றிய அமைச்சர் அலி சப்ரி, பொருளாதார மீட்சிக்காக இலங்கைக்கு வழங்கிய ஆதரவிற்கு சர்வதேச சமூகத்திற்கு நன்றி தெரிவித்ததோடு, இது தொடர்பான முன்னேற்றம் குறித்தும் விளக்கினார்.

கடந்த ஆண்டு டிசம்பரிலும், இவ்வாண்டு ஜனவரியிலும் ஜனாதிபதியால் சர்வகட்சி மாநாட்டை கூட்டுவதற்கும் ஜனாதிபதி தலைமையில் நல்லிணக்கத்திற்கான அமைச்சரவை உபகுழுவை நியமிப்பது உள்ளிட்ட நல்லிணக்கத்திற்காக அரசாங்கம் முன்னெடுத்துள்ள முயற்சிகள் குறித்தும் அமைச்சர் இதன் போது விளக்கமளித்தார்.

13ஆவது அரசியலமைப்பு திருத்தம் மற்றும் முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாடு குறித்தும் அமைச்சர் விளக்கினார். உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறையை அமைப்பதற்கான தற்போதைய முயற்சிகள் குறித்த புதுப்பிப்பை அவர் இராஜதந்திரிகளுக்கு வழங்கினார். மேலும் நாட்டின் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு குறித்த அனுபவப் பகிர்வுகளைப் பெற்றுக் கொள்வதற்காக தென்னாபிரிக்காவிற்கு உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொண்டிருந்த போது அது குறித்த நடைமுறைகளை எளிதாக்கியமைக்கும் அந்நாட்டு அரசாங்கத்திற்கு அமைச்சர் இதன் போது நன்றி தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி ஆகியவற்றின் திட்டங்களின் பின்னணியில் அரசாங்கத்தின் கட்டமைப்பு சீர்திருத்த செயல்முறைகள் தொடர்பான முன்னேற்றங்கள் குறித்து ஜனாதிபதி அலுவலகப் பிரதானி சாகல ரத்நாயக்க விளக்கமளித்தார். மேலும் நல்லாட்சி, ஊழலை ஒழித்தல், கடன் நிலைத் தன்மை, நிதி முகாமைத்துவம், மிகவும் பாதிக்கப்படக் கூடிய பிரிவுகளுக்கான சமூக பாதுகாப்பு ஆகியவை குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பிலும் அவர் தெளிவுபடுத்தினார்.

அண்மையில் நிறுவப்பட்ட வெளிநாடுகளிலுள்ள இலங்கையர் விவகாரங்களுக்கான அலுவலகம் உள்ளிட்டவை குறித்த அரசாங்கத்தின் முன்முயற்சிகளை வெளிவிவகார செயலாளர் சுட்டிக்காட்டினார். இவ் விளக்கமளிப்புக்களைத் தொடர்ந்து இராஜதந்திரிகள் முதலீட்டு ஊக்குவிப்பு, நல்லிணக்கம், நல்லாட்சி மற்றும் ஊழலுக்கு எதிரான பல விடயங்கள் குறித்து கலந்துரையாடினர்.

வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய, ஜனாதிபதி அலுவலகப் பிரதானி சாகல ரத்நாயக்க மற்றும் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன ஆகியோரும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டிருந்தனர்.

# மூத்த தமிழ்ப் பத்திரிகையாளர் பொ.மாணிக்கவாசகம் மறைந்தார்



இலங்கையின் மூத்த தமிழ்ப் பத்திரிகையாளர் பொன்னையா மாணிக்கவாசகம் அவர்கள் 12 ஏப்ரல் 2023 புதன்கிழமை இம்மண்ணுலக வாழ்வை முடித்துக் கொண்டு இறைவனடி சேர்ந்தார்.

ரொய்ட்டர், பிபிசி, வீரகேசரி மற்றும் மின்னிதழ்களில் செய்தியாளராகவும் கட்டுரையாசிரியராகவும் பணி புரிந்து வந்தவரும் வவுனியாவிலிருந்து வெளிவரும் பசுமை சஞ்சிகையின் மதியுரைஞராகவும் செயற்பட்டு வந்தவர். அன்னார் நாட்டின் நெருக்கடியான கால கட்டங்களில் குறிப்பாக தமிழ்ப் பிரதேசங்களில் இடம் பெற்ற யுத்த மோதல்கள் குறித்து தமது உயிரையும் பொருட்படுத்தாமல் செய்தி சேகரித்து சர்வதேச மெங்கும் மக்கள் எதிர் கொண்ட துன்பங்களை வெளிப்படுத்தி வந்தார்.

அன்றைய நாட்களில் இரவு 9.15மணிக்கு ஒலிபரப்பாகும் பிபிசியின் தமிழோசை கேட்காமல் குறிப்பாக இலங்கை செய்திகளில் வடமாகாண செய்தியாளர் மாணிக்கவாசகத்தின் செய்திகளையும் பெட்டகங்களையும் கேட்காமல் உறங்குவதில்லை என்பது பலரது நிலைப்பாடு.

கடந்த 01.04.2023 அன்று தனது 76ஆவது பிறந்ததினத்தைக் கொண்டாடியவர் 12 ஏப்ரல் 2023 எம்மிடமிருந்து விடைபெற்றார் அன்னாரின் இறுதிக் கிரியைகள் 13ஏப்ரல் 2023 வியாழனன்று நடைபெற்றது..

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஈழநாடு பத்திரிகை வாசகர்கள் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

# சமூக சேவையாளர் முல்லைத்திலகன் மறைந்தார்



1983 ஆரம்ப காலங்களில் கனேடிய மண்ணில் குறிப்பாக மொன்றியல் நகரில் பல தளங்களில் நின்று தமிழர் நிலைப்பாட்டிற்கும் புலம்பெயர்ந்து வரும் ஈழத்தமிழ் அகதியாளர்களுக்கும் அவர்களது முன்னேற்றத்திற்குமாக பணியாற்றிய எங்கள் அன்பிற்குரிய முல்லைத் திலகர் அவர்கள் தனது 72வது வயதில் 10 ஏப்ரல் 2023 திங்கட்கிழமை டொரோன்டோவில் காலமானார்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஈழநாடு பத்திரிகை வாசகர்கள் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

# இருபாலை சிறுவர் இல்லத்தில் 80 வயதான போதகரால் சிறுமிகள் துஷ்பிரயோகம்! திருநெல்வேலி சைவச் சிறுவர் இல்லத் தாக்குதல் 2 சிறுவர்களைக் காணவில்லை!



யாழ்ப்பாணம் இருபாலை பகுதியில் சட்டவிரோதமான முறையில் இயங்கிய சிறுவர் இல்லத்தில் தங்கியிருந்த சிறுமிகள் 80 வயதான தலைமை போதகரினால் பாலியல் துஸ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்பட்டனர் என விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இருபாலை பகுதியில் கிறிஸ்தவ சபை ஒன்றினால் சட்டவிரோதமான முறையில் நடாத்தி செல்லப்பட்ட சிறுவர் இல்லத்தில் இருந்து 16 சிறுவர்கள் அண்மையில் மீட்கப்பட்டுள்ளனர்.

குறித்த சிறுவர் இல்லத்தில் இருந்த அருட்சகோதரி ஒருவர் உள்ளிட்ட மூவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் மீட்கப்பட்ட சிறுவர்களிடம் காவற்துறையினர் மற்றும் சிறுவர் நன்னடத்தை பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

விசாரணைகளின் போது, தாம் தவறு இழைத்தால் பிளாஸ்ரிக் பைப் ஒன்றில் மண்ணை நிரப்பி அதனால் அடிப்பார்கள் என சிறுவர்கள் தெரிவித்துள்னர். அத்துடன் தாம் இல்லத்தில் துன்புறுத்தப்படுவது தொடர்பில் கல்வி கற்கும் பாடசாலை ஆசிரியர்கள் பலரிடம் முறையிட்ட போதும் அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்காது எமது இல்ல போதகரிடம் நாம் கூறியவற்றை கூறி விடுவார்கள்.

அதனால் நாம் ஆசிரியர்களிடம் முறையிட்டமைக்காக மீண்டும் இல்லத்தில் துன்புறுத்தல்களுக்கு உள்ளாவோம் என சிறுவர்கள் விசாரணைகளில் தெரிவித்துள்ளனர்

அதேவேளை சிறுவர் இல்லத்தில் இருந்த 80 வயதான தலைமை போதகர் சிறுமிகளை பாலியல் துஸ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கியத்துடன் பாலியல் ரீதியான துன்புறுத்தல்களை மேற்கொண்டுள்ளார்.

இதனை அடுத்து தலைமை போதகரை காவற்துறையினர் கைது செய்ய நடவடிக்கை எடுத்த போது அவர் தலைமறைவாகியுள்ளார். இந்நிலையில் கடந்த வியாழக்கிழமை சம்பவத்துடன் தொடர்புடைய போதகர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது இவ்வாறிருக்க திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச்சங்க சைவச் சிறுவர் இல்லத்திற்கு சேதம் விளைவித்தனர் என நிர்வாகத்தினரால் பொலிஸாரிடம் பெயர் குறிப்பிட்ட இரண்டு சிறுவர்களை அன்றைய தினம் முதல் காணவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. இது வரையில் (12.04.23) காணாமல் இரு சிறுவர்கள் தொடர்பிலும் எந்தவிதமான தகவலும் கிடைக்கப் பெறவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 27ஆம் திகதி சிறுவர் இல்ல விடுதி முகாமையாளர் சிறுவர் நீதிமன்றால் பணி இடைநிறுத்தப்பட்டிருந்தார். இதனையடுத்து சிறுவர் இல்லத்தில் தங்கியிருந்த சிறுவர்கள், இல்ல நிர்வாக கட்டடங்களுக்குச் சேதம் விளைவித்திருந்தனர்.

இந்தச் சம்பவத்தில் தொடர்புடைய சிறுவர்கள் என நான்கு பேரது பெயர்களைக் குறிப்பிட்டு கோப்பாய் காவல் நிலையத்தில் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் தலைவரால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. அவ்வாறு பெயர் குறிப்பிட்ட நான்கு சிறுவர்களில் இருவரே கடந்த 27ஆம் திகதி முதல் காணாமல் போயுள்ளனர்.

அதேவேளை சிறுவர் இல்லத்தில் தாக்குதலுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் என்று அடையாளப்படுத்தப்பட்ட 12 சிறுவர்கள், சிறுவர் நீதிமன்றத்தால் சான்று பெற்ற பாடசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## திருகோணமலையில் அமெரிக்கப் போர்க்கப்பல்!

அமெரிக்காவின் யு.எஸ்.என்.எஸ் பிரன்சுவிக், என்ற கடற்படையின் போக்குவரத்து கப்பல் திருகோணமலை துறைமுகத்தை வந்தடைந்தது.

இது, அமெரிக்க கடற்படை கட்டளையின் விரைவுப் போக்குவரத்துக் கப்பல் ஆகும். துருப்புக்கள் மற்றும் இராணுவ உபகரணங்கள், உள்-திரையரங்கு மற்றும் போக்குவரத்தை வழங்கும் திறன் கொண்ட இந்த கப்பலில் 1200 கடல் மைல் தூரத்திற்கு 600 தொன் உபகரணங்களை எடுத்துச் செல்ல முடியும். இதன் சராசரி வேகம் மணிக்கு 25 கடல் மைல்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எரிபொருள் நிரப்பலுக்காக இந்த கப்பல் திருகோணமலைக்கு வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது





கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com




# இந்துத் தமிழர்கள்?

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -

இந்தியத் தலைநகர் புதுடில்லியில் உள்ள இந்து அமைப்புகள் கடந்த ஐந்தாம் திகதி இலங்கைத் தமிழ் இந்துக்களுக்கு நீதி கோரி ஒரு போராட்டத்தை முன்னெடுத்தன. இலங்கையில் இந்து ஆலயங்கள் இடிக்கப்படுவதும் இந்துக்களுக்கு தீங்கு இழைக்கப்படுவதும் ஒரு கலாசார இனப்படுகொலை என்றும் மேற்படி இந்து அமைப்புக்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கு உத்தியோகபூர்வமாக விஜயம் செய்யவிருக்கும் ஒரு காலகட்டத்தில் இந்த எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருக்கிறது.

இலங்கை இனப்பிரச்சினையை இந்து தமிழர்களின் பிரச்சினையாக குவிமையப்படுத்தி இந்தியாவை ஆளும் பாரதிய ஜனதாக் கட்சியை கையாள்வதற்கு ஈழத் தமிழர்கள் மத்தியில் தாயகத்தில் ஒரு பகுதியினரும் புலம்பெயர்ந்த தமிழர்களில் ஒரு பகுதியினரும் தமிழகத்தில் உள்ள ஈழத்தமிழர்களின் ஒரு பகுதியினரும் கடுமையாக உழைத்து வருகிறார்கள்.

சில ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழகத்தில் வசிக்கும் காசி ஆனந்தன் உட்பட ஈழத் தமிழர்கள் சிலர் அவ்வாறான அணுகுமுறையை முன்வைத்து ஓர் அமைப்பையும் உருவாக்கியிருந்தார்கள். அதன் தொடர்ச்சியாக இரண்டாவது வட்டுக்கோட்டை தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டது. அதன் பின் கடந்த ஆண்டு புலம் பெயர்ந்த தமிழர்கள் சிலரின் ஒருங்கிணைப்பில் நாட்டில் உள்ள முன்னாள் விடுதலைப் புலிகள் இயக்கத்தவர்களின் கட்சியைச் சேர்ந்தவர்கள் புதுடில்லியில் ஒரு மாநாட்டில் கலந்து கொண்டார்கள்.

அதன் தொடர்ச்சியாக இரண்டாவது மாநாடும் புதுடில்லியில் நடத்தப்பட்டது. இம்மாநாடுகளில் டெல்லியில் உள்ள சிவசேனை அமைப்பைச் சேர்ந்தவர்கள் பங்கு பற்றினார்கள். இந்திய ஆளுங்கட்சியாக உள்ள பாரதிய ஜனதாவை அணுகுவதற்கு இந்துத்துவாவை ஒரு வாகனமாக கையாள வேண்டும் என்ற முனைப்பு ஈழத் தமிழர்கள் மத்தியில் கடந்த சில ஆண்டுகளாக அதிகரித்து வருகிறது.

அதற்குப் பின்வரும் காரணங்கள் உண்டு. முதலாவது காரணம் தமிழகத்தைச் சேர்ந்த திராவிட கட்சிகளில் தங்கி இருப்பதனால் எந்தப் பயனும் இல்லை என்ற முடிவுக்கு அவர்கள் வந்து விட்டது. குறிப்பாக இறுதிக் கட்டப் போரில் கலைஞர் கருணாநிதி நடந்து கொண்ட விதம் தொடர்பில் ஈழத் தமிழர்களில் ஒரு பகுதியினர் அவர் மீதும் அவருடைய கட்சி மீதும் தொடர்ந்து வெறுப்போடு காணப்படுகிறார்கள். இந்த வெறுப்பும் பாரதிய ஜனதாவை நோக்கிப் போக ஒரு காரணம்.

இரண்டாவது காரணம், காங்கிரஸ் கட்சி மீதான எதிர்ப்பும் பாரதிய ஜனதாவின் மீதான விருப்பமும். கொங்கிரஸ் கட்சியின் ஆட்சிக் காலத்துடன் ஒப்பிடுகையில், பாரதிய ஜனதாவின் ஆட்சிக் காலங்களில் ஒப்பீட்டளவில் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான முடிவுகள் எடுக்கப்பட்டதான ஒரு நம்பிக்கை ஈழத் தமிழர்கள் மத்தியில் உண்டு. எனவே பாரதிய ஜனதாவின் ஆட்சிக் காலத்தில் ஈழத் தமிழர்களுக்கு நல்லது நடக்கும் என்று அவர்கள் நம்புகிறார்கள்.

மூன்றாவது காரணம்,. ஈழத்தில் சிவசேனை, உருத்திர சேனை போன்ற அமைப்புக்கள் துடிப்பாகச் செயற்பட்டு வருகின்றன. மலையகத்திலும் ஆர்.எஸ்.எஸ் பரவலாக கால் பதித்து வருகின்றது. இந்த அமைப்புகளின் ஊடாக ஈழத்தமிழ் அரசியலை இந்துத்துவா தடத்தில் ஏற்றுவதற்கான முயற்சிகள் நடக்கின்றன. இலங்கை அரசாங்கங்கள் தமிழ் மக்களைத் தோற்கடிப்பதற்கு




உலகில் உள்ள எந்த பிசாசோடும் கூட்டிச் சேர்வதற்கு தயாராக காணப்பட்டன, காணப்படுகின்றன. அவ்வாறு ஒரு பெரிய இனம் எந்த பிசாசோடும் கூட்டுச் சேர்ந்து தமிழர்களை ஒடுக்கலாம் என்றால், ஒரு சிறிய இனம் மத ரீதியாக இந்திய ஆளும் கட்சியை கையாள்வதில் என்ன தவறு உண்டு? என்று அவர்கள் கேட்கிறார்கள்.

மேற்கண்ட காரணங்களை முன்னிறுத்தி ஈழத் தமிழ் அரசியலை இந்து அரசியலாக சுருக்குவதோடு இந்திய மத்திய அரசாங்கத்தை அணுகும் முயற்சிகளில் தாயகத்திலும் புலம் பெயர்ந்த தமிழ் பரப்பிலும் உள்ள பல்வேறு வகைப்பட்ட அமைப்புகளும் சக்திகளும் தொடர்ச்சியாக உழைத்து வருகின்றன. இதில் தொகுத்துக் கவனிக்க வேண்டிய விடயம் என்னவென்றால், புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் வழிவந்த அமைப்புகளும் உட்பட விடுதலைப் புலிகள் அல்லாத ஏனைய அமைப்புகளைச் சேர்ந்தவர்களும் இது போன்ற முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார்கள்.

புலம்பெயர்ந்த தமிழ் மக்களிடம் இப்பொழுது மொழி உண்டு, தேவையான பணம் உண்டு, உலகம் முழுவதும் தொடர்புகள் உண்டு. எனவே அவர்கள் தமிழகத்திலும் டெல்லியிலும் உள்ள பாரதிய ஜனதாக்கட்சிப் பிரமுகர்களை எளிதாக அணுகுகிறார்கள், நெருங்கி வருகிறார்கள். அதன் மூலம் தாயகத்தில் வாழும் மக்களுக்கு எதையாவது செய்யலாமா என்று சிந்திக்கின்றார்கள். ஆனால் அவ்வாறு சிந்திக்கும் அமைப்புகளும் தனி நபர்களும் தாயகத்தில் மக்களாணையைப் பெற்றவர்கள் அல்ல என்பதே இந்த ராஜதந்திரத்தில் உள்ள அடிப்படைப் பலவீனம் ஆகும்.

இராஜதந்திரம் எனப்படுவது அதிகாரத்தின் கலை. ஒரு அதிகார மையம் தனது நலன்சார் நோக்கு நிலையில் இருந்து ஏனைய அதிகார மையங்களோடு இடையூடாடுவது தான் இராஜதந்திரம். அப்படிப் பார்த்தால் ஈழத் தமிழர்கள் மத்தியில் அதிகார மையமாக இருப்பது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் கட்சிகளும் தான்.

ஆனால் தாயகத்தில் பலமாக உள்ள கட்சிகள் மேற்கண்டவாறு இந்துத்துவா இராஜதந்திரத்தை பின்பற்றுவதாக தெரியவில்லை.

குறிப்பாக தாயகத்தில் உள்ள பலமான கட்சியாகிய தமிழரசுக் கட்சியின் மேலிடத்தில் காணப்படும் சம்பந்தரும் சுமந்திரனும் இந்த விடயத்தில் இந்தியாவில் முழுமையாகத் தங்கியிருக்கத் தயாரில்லை. 2021இல் இந்தியா கூட்டமைப்பை டில்லிக்கு வருமாறு அழைத்த போது சம்பந்தர் அந்த அழைப்பை எதோ காரணங்களைக் கூறி ஏற்றுக் கொள்ளவில்லை.

எனினும் தமிழரசுக் கட்சிக்குள் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் தலைமைத்துவப் போட்டி காரணமாக சிறீதரனும் சுமந்திரனும் யார் இந்தியாவை அதிகம் நெருங்கிச் செல்வது என்ற ஒரு போட்டியில் ஈடுபட்டிருப்பதாகவும் தெரிகிறது. அண்மை மாதங்களில் இருவருமே தமிழகத்துக்கு சென்றார்கள். இருவருமே அங்குள்ள பாரதிய ஜனதாக் கட்சிப் பிரமுகராகிய அண்ணாமலையோடு தொடர்புகளை வைத்திருக்கிறார்கள். தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவத்தைக் கைப்பற்றுவது என்றால் இந்தியாவின் ஆசீர்வாதங்கள் தேவை என்று அவர்கள் கருதுகிறார்களோ தெரியவில்லை.

ஆனால் இது கட்சிக்குள் ஏற்பட்ட தலைமைத்துவ போட்டி மற்றும் தனியாள் முனைப்பு போன்றவற்றின் விளைவு தான். மாறாக, தமிழர்களை ஒரு தேசமாகக் கருதி இந்திய தேசத்தோடு இராஜதந்திர உறவுகளை எவ்வாறு பேண வேண்டும் என்ற தீர்க்க தரிசனம் மிக்க விஞ்ஞானபூர்வமான ஒரு வெளியுறவுத் தரிசனத்தின் அடிப்படையில் எடுக்கப்பட்ட முடிவுகளாகத் தெரியவில்லை.

அவ்வாறான வெளியுறவுத் தரிசனங்கள் தேவை என்று தமிழ் மக்கள் மத்தியில் உள்ள எந்தக் கட்சியும் சிந்திப்பதாகவும் தெரியவில்லை.தமிழ் தேசிய மக்கள் முன்னணியானது இந்தியாவின் புவிசார் அரசியல் நலன்களுக்குத் தான் எதிரில்லை என்று அடிக்கடி கூறி வருகிறது.

அதே சமயம் 13வது திருத்தத்தை இந்தியா தமிழ் மக்கள் மீது திணிப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் தெளிவாகப் பிரித்து கூறுகிறது. ஆனால் நடைமுறையில் அக் கட்சியின் செயற்பாடுகள் இந்தியாவை எதிரியாகப் பார்பதாகவே தெரிகிறது.தனது அரசியல் எதிரிகளை இந்தியாவின் கைக்கூலிகள் என்று கூறும் போது மறைமுகமாக இந்தியா எதிரியாகிறது.

அக்கட்சியின் லண்டன் ஆதரவாளர்கள் முகநூலில் எழுதும் குறிப்புகள் இந்தியாவை புத்திசாலித்தனமாக அணுக வேண்டும் என்ற வெளியுறவுத் தரிசனத்தைக் கொண்டவைககளாகத் தெரியவில்லை. அவ்வாறு இந்தியாவை நீக்கி விட்டு மேற்கு நாடுகள் கையாண்டு தமது அரசியல் நலன்களை எப்படி பெறலாம் என்பது தொடர்பாக அவர்கள் இதுவரையிலும் விஞ்ஞான பூர்வமான வெளியுறவுக் கொள்கை எதனையும் முன் வைத்ததாகவும் தெரியவில்லை.

பூகோள புவிசார் அரசியலைப் பற்றி அதிகம் பேசும் ஒரு கட்சி அதன் வெளியுறவுக் கொள்கையின் ஒரு பகுதி தான் உள்நாட்டுக் கொள்கையும் என்பதனை இதுவரை தெளிவாக நிரூபித்திருக்கவில்லை. அக்கட்சி மட்டுமல்ல, உள்ளதில் பெரிய தமிழரசுக் கட்சியிடமும் வெளியுறவுக் கொள்கை என்று ஏதும் உண்டா?. இந்தியாவுக்கு கடிதம் எழுதிய ஏழு கட்சிகளிடமும் அப்படி எதுவும் உண்டா? இவ்வாறு தமிழ் மக்களின் ஆணையைப் பெற்ற,தமிழ் மக்கள் மத்தியில் செயல்படுகின்ற கட்சிகள் தமது வெளியுறவுக் கொள்கையை வெளியுறவு நடைமுறையை வெளிப்படையாக முன் வைக்காத ஒரு வெற்றிடத்தில் மேற்படி கட்சிகளிடம் வெளியுறவுக் கடடமைப்பு எதுவும் இல்லாத வெற்றிடத்தில் தாயகத்திலும் புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியிலும் தமிழகத்தில் வசிக்கும் ஈழத் தமிழர்கள் மத்தியிலும் ஒரு பகுதியினர் பாரதிய ஜனதாவை இந்துத்துவா இராஜதந்திரத்தின் மூலம் நெருங்கி செல்லலாம் என்று நம்புவதாக தெரிகிறது.

ஆனால் இந்தியாவில் கடந்த 8 ஆண்டு கால பாரதிய ஜனதாவின் ஆட்சியைத் தொகுத்து பார்த்தால் அக்கட்சியும் 13வது திருத்தத்தை தாண்டிச் செல்லத் தயாரில்லை. தமிழகத்தில் திராவிடக் கட்சிகளிடமிருந்து ஈழ விவகாரத்தை தன் வசப்படுத்த வேண்டும் என்று தமிழக பாரதிய ஜனதா தீவிரமாக உழைத்து வருகின்றது.

இது விடயத்தில் திமுகவின் மீது விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களுக்கு உள்ள கோபத்தை அக்கட்சி பயன்படுத்த விளைகிறது. ஆனால் கடந்த எட்டு ஆண்டு கால அனுபவத்தின்படி இந்தியா ஈழத் தமிழர்களுக்கு வழங்கக் கூடிய தீர்வு 13-ஐத் தாண்டவில்லை. எனவே

இது விடயத்தில் தமிழ் மக்கள் மத்தியில் உள்ள மக்கள் ஆணையைப் பெற்ற கட்சிகள் முதலில் தமது வெளியுறவுக் கொள்கையை பகிரங்க விவாதத்துக்கு உட்படுத்த வேண்டும். இதை இப்படி எழுதி எழுதியே எனக்குச் சலித்து விட்டது.

முதலில் வெளியுறவுக் கொள்கை வேண்டும். பாரதிய ஜனதாவை அணுகத் தான் வேண்டும். ஏனென்றால் அது இந்திய மக்களின் ஆணையைப் பெற்ற கட்சி. இந்திய மத்திய அரசாங்கத்தில் யார் இருந்தாலும் அவர்களை அணுக வேண்டும்.

ஆனால் அதற்காக தமிழ்த் தேசியத்தை சைவத் தேசியமாகவோ இந்து தேசியமாகவோ குறுக்கத் தேவையில்லை. மாறாக தெளிவான வெளியுறவு இலக்குகளை முன் வைத்து இந்தியாவின் புவிசார் பாதுகாப்பு வியூகத்தில் ஈழத் தமிழர்கள் எப்படிப் பங்காளிகளாக மாறலாம் என்பதைத் தீர்மானிக்க வேண்டும். ஒரு தேசமாகச் சிந்திப்பது என்பது அதுதான்.

# 12வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

# உறவுகளே! ஏப்ரல் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

12 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 12 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவு களே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

08 ஏப்ரல் 2023 முதல் 14 ஏப்ரல் 2023 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு கடந்த செப்டம்பர் முதல் 12வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ் வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 31ம் நாள் நினைவஞ்சலி



### திருமதி பாக்கியம் மயில்வாகனம்

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் காங்கேசன்துறையை வதிவிடமாகவும் பிரான்ஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பாக்கியம் மயில்வாகனம் அவர்களுடைய 31ம்நாள் நினைவு நாள் 15 ஏப்ரல் 2023 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி பாக்கியம் மயில்வாகனம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தை களும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## நினைவழியா நினைவஞ்சலிகள்



### திருமதி செல்வநாயகி சோமசுந்தரம்

யாழ்ப்பாணம் தெல்லிப்பளையைச் சேர்ந்த திருமதி சோமசுந்தரம் செல்வநாயகி திரு செல்லையா சோமசுந்தரம் ஆகியோரது நினைவு நாளையொட்டி கனடாவில் வசிக்கும் அன்னாரது குடும்பத்தினர் 12 ஏப்ரல் 2023 புதன்கிழமை அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி சோமசுந்தரம் செல்வநாயகி திரு செல்லையா சோமசுந்தரம் இணையரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவர்களது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 8வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு செல்லத்தம்பி வரதராஜன்

புங்குடுதீவு 10ம் வட்டாரம் கண்ணகை அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் பொன்னாந்தோட்டத்தை வதிவிடமாகவும் சுவிஸை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு செல்லத்தம்பி வரதராஜன் அவர்களுடைய எட்டாவது ஆண்டு நினைவு நாள் 15 ஏப்ரல் 2023 சனிக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு செல்லத்தம்பி வரதராஜன் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# இறை இரக்கப் பெருவிழா




இறை இரக்கப் பெருநாளை முன்னிட்டு இறை இரக்கப் பக்திச் சபையினர் 16 ஏப்ரல் 2023 ஞாயிற்றுக்கிழமை அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்குகின்றார்கள். அதேவேளை இறை ஆசியைப் பெற்றிட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றார்கள் பங்குத் தந்தையுடன் இறை இரக்கப் பக்திக் குழுவினர்.

காலம்:- 16 ஏப்ரல் 2023 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு திருப்பலி.

இடம்:- தூய ஆரோக்கிய அன்னை பங்கு


131 Birchmount Rd - Scarborough - M1N 3J7

தொடர்புகளுக்கு 416 297 7817 / 416 335 6433

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



04 ஏப்ரல் 2023 செவ்வாய்க்கிழமை அனலைதீவு 2ம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி சற்குணம் சாம்பசிவம் அவர்களது 16வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




05 ஏப்ரல் 2023 புதன்கிழமை கனடாவில் வசிக்கும் திரு அருண் திருநாவுக்கரசு அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திரு அருண் திருநாவுக்கரசு அவர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




10 ஏப்ரல் 2023 திங்கட்கிழமை பங்குனித் திங்கள் உபயமாக கனடாவில் வசிக்கும் திரு, திருமதி கோணேஸ்வரன் சுதர்சினி குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



10 ஏப்ரல் 2023 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி சிவபாலன் லலிதாகுமாரி இணையரது 30வ திருமண நன்நாளாகும். அன்றையதினம் இணையர்கள் தமது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்




11 ஏப்ரல் 2023 செவ்வாய்க்கிழமை கனடா Exeuitive woodwork Ltd ஊழியர்கள் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.



12 ஏப்ரல் 2023 புதன்கிழமை தெல்லிப்பளையைச் சேர்ந்த திருமதி செல்வநாயகி சோமசுந்தரம் அவர்களது நினைவுநாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது துணைவர் திரு செல்லையா சோமசுந்தரம் அவர்களது நினைவையும் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




அல்பியன் பதியில் கோயில்கொண்டருளியிருக்கும்

# அருள்மிகு கனடா ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில்

## மகோற்சவ விஞ்ஞாபனம் 2023



மாரிதேவி தியானம்
அருணமணி நிபாங்கம் அக்னிகேசம் கராண்டம்
டமருக கர பாசம் கட்க ஹஸ்தம் கபாலம்
அருண நயன யுக்தம் ஹாரகேயூர யுக்தம்
அகில புவன மாதா மாரிகாதேவி ஸ்வரூபம்

**அம்பிகை அடியார்களே!**

நிகழும் மங்களகரமான சோபகிருது வருடம் சித்திரைத்திங்கள் 7ம் நாள் (20.04.2023) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அச்சுவினி நட்சத்திரமும் பிரதமை திதியும் கூடிய சுபவேளையில் ஸ்ரீ முத்துமாரி அம்பாளுக்கு துவஜாரோகணம் (கொடியேற்றம்) ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் மகோற்சவம் நடைபெறும். அடியவர்கள் உற்சவ காலங்களில் ஆலயம் வந்து அம்பிகையை தரிசித்தல் உத்தமோத்தம புண்ணியமாகும்.

| | |
|---|---|
| 19-04-2023 புதன் | வருடாந்த மகோற்சவ கிரியைகள் ஆரம்பம். விக்னேஸ்வர, மூலமூர்த்தி, உத்சவமூர்த்தி, அஸ்திரதேவி, சிம்ம, அனுக்ஞைகள், கிராம சாந்தி, வாஸ்து சாந்தி, மிருத்சங்கிரகணம் |
| 20-04-2023 வியாழன் | காலை விசேட புண்ணியாக வாசனம், ரக்ஷாபந்தனம், பேரிதாடனம், வசந்தமண்டபபூசை, அஸ்திரதேவியோடு துவஜபட வீதி பிரதக்ஷணம், மூல சிம்ம பூசை, தம்ப பிரதிஷ்டை, துவஜபட அபிசேகம், சண்டா தேவி ஆவாகனம், யாத்ரா தானம், துவஜாரோகணம் (கொடியேற்றம்), கணபதி தானம், சிம்ம தானம், அஸ்திரதேவி ஆவாகனம், பலிபீட பிரதிஷ்டை, மகோசிவாதம், வீதி பிரதக்ஷணம், நவசந்தியாவாகனம், இரவு: யாகாரம்பம் |
| 04-06-2023 வியாழன் | காலை: யாகாங்குர விஸர்ஜனம், சூர்ணோற்சவம், விசேட தீர்த்த தொட்டியில் அஸ்திரதேவி ரக்ஷாபந்தன விஸர்ஜனம், தீர்த்த ஸ்நானம் முடிந்து மகாபூர்ணாகுதி, யாக கும்பாபிஷேகம், இரவு: துவஜாவரோகணம் (கொடியிறக்கம்), நவசந்தி விஸர்ஜனம், மௌனோற்சவம், மௌனோற்சவம், ரக்ஷாபந்தன விஸர்ஜனம், சண்டேஸ்வர உற்சவம், ஆசாரிய உற்சவம், குரு வழிபாடு. |

| நாள் | உற்சவம் | பகல் உபயகாரர் | இரவு உபயகாரர் |
|---|---|---|---|
| 20-04-2023 (வியாழன்) | 1ம் திருவிழா | கொடியேற்றம் காலை 10:00 மணி, ராஜ்குமார் குடும்பம், உதயகுமார் குடும்பம், ஸ்ரீகிரன் குடும்பம், பாலகிருஷ்ணன் குடும்பம் | சிவபாலன் குடும்பம், சுதாகரன் குடும்பம் மாணிக்கம் சௌந்திரமலர் குடும்பம் |
| 21-04-2023 (வெள்ளி) | 2ம் திருவிழா | பிரேம்குமார் இளங்கோ குடும்பம் | நடராஜதுரை குடும்பம் |
| 22-04-2023 (சனி) | 3ம் திருவிழா | சந்திரலிங்கம், தமிழ்செல்வி குடும்பம் | விஜயகுமார் சுவர்ணா குடும்பம் |
| 23-04-2023 (ஞாயிறு) | 4ம் திருவிழா | ஆனந்தகுமார் ஆனந்தவேல் குடும்பம், பிரணவன் பாலகுமார் குடும்பம், கண்ணன் வெங்கடாசலம் குடும்பம் | அருள் சந்திரன் குடும்பம் |
| 24-04-2023 (திங்கள்) | 5ம் திருவிழா | சுவர்ணராஜா சின்னமயில் குடும்பம் | குணசேகரம் குடும்பம், தனசேகரம் குடும்பம், ஜெயசேகரம் குடும்பம். |
| 25-04-2023 (செவ்வாய்) | 6ம் திருவிழா | மோகனதாஸ் சுதன் சாந்தி குடும்பம் | நாராயணசாமி மனோகர் குடும்பம் (மாணிக்கம்பிள்ளை) |
| 26-04-2023 (புதன்) | 7ம் திருவிழா | சிவசுப்ரமணியம் ராஜசேகரம், கீதாஞ்சலி, தயாபரன், சிந்துஜா குடும்பம், தம்பையாபிள்ளை, பத்மன் குடும்பம் | சிவநேசன் தங்கேஸ்வரி குடும்பம் |
| 27-04-2023 (வியாழன்) | 8ம் திருவிழா | சுரேஸ்வரன்(அண்ணாச்சி), சந்திரகலா குடும்பம் | (வேட்டைத்திருவிழா) மோகனதாஸ் தம்பிராணி குடும்பம், செல்வி சுஜாதா குடும்பம், சது கிரேஸ் குடும்பம் |
| 28-04-2023 (வெள்ளி) | 9ம் திருவிழா | தேவசிகாமணி தங்கமணி குடும்பம் ( தேவக்கிளி குடும்பம் ) | நிரோசன் குடும்பம், கீதன் குடும்பம், நந்தன் குடும்பம், துளா குடும்பம், ஜெயம் குடும்பம் |
| 29-04-2023 (சனி) | 10ம் திருவிழா | ஞானி கௌரி குடும்பம், இமயேந்திரன் பவானி குடும்பம் | பாலகுமார் பாலசந்திரன் குடும்பம் |
| 30-04-2023 (ஞாயிறு) | 11ம் திருவிழா | (பூங்காவனம்) இளைஞர்கள் | (பூங்காவனம் இரவு)இளைஞர்கள் |
| 01-05-2023 (திங்கள்) | 12ம் திருவிழா | இரா நடராஜன் குடும்பம் | [illegible] சுரேஷ் குடும்பம், பிரதீபன் குடும்பம் |
| 02-05-2023 (செவ்வாய்) | 13ம் திருவிழா | கண்ணன் சங்கீதா குடும்பம் | சப்பறம் சி. இளையகுமார் குடும்பம் |
| 03-05-2023 (புதன்) | 14ம் திருவிழா | தேர் க.இ.த. சந்திரலிங்கம் சிவகுமி குடும்பம் | கந்தசாமி அன்னம்மா குடும்பம் |
| 04-05-2023 (வியாழன்) | 15ம் திருவிழா | தீர்த்தம் மாலதி தேவராஜ் குடும்பம் | கொடியிறக்கம் சுகந்தன் கவிதா குடும்பம் |
| 08-05-2023 (திங்கள்) | குளிர்த்தி | குளிர்த்தி அபிசேகம் மோகன். சிவகுமார் சந்தானலக்ஷ்மி குடும்பம் | கற்பூரத் திருவிழா அசோக்குமார் மாலினி குடும்பம் |
| 12-05-2023 (வெள்ளி) | இரவு | வைரவர் மடை - பிரணவி பவித்ரா குடும்பம் | |

| | | |
|---|---|---|
| அபிசேகம் | பகல் 9:00 மணி | இரவு 6:00 மணி |
| மூலஸ்தான பூசை | பகல் 9:30 மணி | இரவு 6:30 மணி |
| வசந்த மண்டப பூசை | பகல் 11:00 மணி | இரவு 8:00 மணி |

ஆலய பிரதம குரு: ஆகம கிரியா விபூஷணர் சிவஸ்ரீ ஆறுமுகக்குருக்கள்

மங்கள வாத்தியம்: சிவ நாதஸ்வர ஸ்ரீபுரிக் அக்கடமி, சிவபாலன் குழுவினர்

1771 ALbion Road. Unit #1, Toronto, Ontario, M9W 5S7, Canada. 416.213.0110

**04-05-2023 வியாழக்கிழமை சித்ரா பௌர்ணமி அன்று காலை 6 மணி முதல் பிதிர் தர்ப்பணம் செய்யப்படும்**

www.shrimuththumaari.com Canada-Shri-Muththumaari-Amman

இவ்வண்ணம்: ஆலய தர்மகர்த்தா சபையினர்

# ரணில் ஏன் இப்படிச் செய்கிறார்?

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -



வெடுக்குநாறி மலையில் சிவனாலயம் சிதைக்கப்பட்டமை, கன்னியா வெந்நீர் ஊற்று விவகாரம்,கச்சதீவில் புத்தர் சிலை, நெடுந்தீவில் வெடியரசன் கோட்டை விவகாரம், புல்மோட்டையில் முஸ்லிம்களின் பிரதேசத்தில் புத்தபிக்குவின் அட்டகாசம், இவற்றோடு பயங்கரவாதத் தடைச் சட்டத்தை புதிய வடிவத்தில் புதுப்பிக்க முற்படுவது... போன்ற அனைத்தும் எப்படிப்பட்ட ஒரு காலகட்டத்தில் நிகழ்கின்றன?

முதலாவதாக ஜெனிவா கூட்டத் தொடர் நடந்து கொண்டிருக்கும் ஒரு காலகட்டம். கடந்த நான்காம் திகதிதான் ஜெனிவா கூட்டத் தொடர் முடிவுக்கு வந்தது. இரண்டாவதாக, இரண்டு முக்கிய அமைச்சர்கள் தென்னாபிரிக்காவுக்கு போய் வந்த ஒரு காலகட்டம். அந்நாட்டின் நல்லிணக்க அனுபவங்களை கற்றுக் கொள்வதே அந்த விஜயத்தின் நோக்கம். அதன் பின் இந்த வாரம் உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழுவுக்கான சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. மூன்றாவது, ஐ.எம்.எஃப்பின் உதவி உறுதி செய்யப்பட்ட ஒரு காலகட்டம்.

தொகுத்துப் பார்த்தால் இப்படிப்பட்ட ஒரு காலகட்டத்தில் அரசாங்கம் அதிகம் அடக்கி வாசிக்க வேண்டும். குறிப்பாக மேற்கத்திய நாடுகளுக்கு நல்ல பிள்ளை வேடம் போட வேண்டும். ஆனால் நடப்பு நிலைமைகளைத் தொகுத்துப் பார்த்தால் அரசாங்கம் தலைகீழாக நடக்கின்றது. ஏன் அப்படி நடந்து கொள்கிறது?

அதற்கு பின்வரும் காரணங்களைக் கூறலாம். முதலாவது காரணம் ஐஎம்எஃபின் நிபந்தனைகளுக்கு பணிந்து மானியங்களை வெட்டும் போது அல்லது பொது நிறுவனங்களை தனியாரிடம் கொடுக்கும் பொழுது அதனால் ஏற்படக்கூடிய சிங்களப் பொது மக்களின் கோபத்தைத் திசை திருப்புவது. இரண்டாவது காரணம் உதவி வழங்கும் நாடுகளும் நிறுவனங்களும் அந்த உதவியை இனப்பிரச்சினையைத் தீர்க்கவேண்டும் என்ற முன் நிபந்தனையோடு பிணைத்திருக்கவில்லை என்பது. மூன்றாவது காரணம் தன்னை விட்டால் வேறு தெரிவு உலக சமூகத்திடம் இல்லை என்று ரணில் விக்கிரமசிங்க திடமாக நம்புகிறார்.

இந்த மூன்று காரணங்களின் அடிப்படையில் தான் அண்மை வாரங்களாக அரசாங்கம் தமிழ் மக்களுக்கு கோபமூட்டும் நடவடிக்கைகளைத் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றது. இதைச் சற்று விரிவாகப் பார்க்கலாம்.

ஐஎம்எஃபின் நிபந்தனைகளை ஏற்று மானியங்களை வெட்டும் போது ஏழைகள் கொதித்து எழுவார்கள். பொதுச்சேவை நிறுவனங்களைத் தனியார் மயப்படுத்தும் போது தொழிலாளர்கள் கொதித்து எழுவார்கள். அதிகம் சம்பாதிப்பவர்களுக்கு வருமான வரி விதிக்கும் போது அவர்கள் ஆர்ப்பாட்டம் செய்வார்கள். ஏற்கனவே இம்மூன்று தரப்புக்களும் கொதித்துக் கொண்டிருக்கின்றன. அவர்களுடைய நடவடிக்கைகளைத் திசை திருப்புவதற்கு அரசாங்கம் இனவிவகாரத்தை கையில் எடுத்திருக்கிறது. அதன் மூலம் சாதாரண சிங்களமக்களின் கவனத்தை எளிதாகத் திசை திருப்பலாம்.

இது ஒரு புதிய உத்தி அல்ல. ஏற்கனவே முன்னம் இருந்த எல்லா அரசாங்கங்களும் கையாண்ட ஓர் உத்தி தான். தென்னிலங்கையில் நெருக்கடி தோன்றும் போது இனவாதத்தை நோக்கி அவர்களுடைய கவனத்தைத் திசை திருப்புவது. தமிழ்மக்கள் பௌத்த மயமாக்கலை எதிர்க்கிறார்கள் அதற்கு எதிராக போராடுகிறார்கள் என்று காட்டினால், சிங்கள மக்களின் கோபம் திசை திருப்பப்பட்டு விடும்.

இது ஒரு காரணம். அடுத்த காரணம், அரசாங்கத்தை பொருளாதார நெருக்கடியில் இருந்து பிணையெடுக்க முற்படும் தரப்புக்கள் தமது உதவிகளுக்கு இனப்பிரச்சினைக்கான தீர்வை ஒரு நிபந்தனையாக முன்வைக்கவில்லை என்று தெரிகிறது.



அவ்வாறு முன்வைத்திருந்திருந்தால் அரசாங்கம் ஜெனிவாக் கூட்டத் தொடர் நடந்து கொண்டிருந்த ஒரு காலகட்டத்தில் இவ்வாறு சிங்கள பௌத்த மயமாக்கலை முடுக்கி விட்டிருக்காது. பொருளாதார நெருக்கடியில் இருந்து அரசாங்கத்தைப் பிணையெடுக்க முற்படும் வெளித் தரப்புக்கள் குறிப்பாக மேற்குநாடுகளும் இந்தியாவும் ஒரு விடயத்தில் ஒரே விதமாகச் சிந்திக்கின்றன.

இப்போதுள்ள நிலைமைகளின்படி ஜேவிபி படிப்படியாக வளர்ந்து வருவதாகக் கருதப்படுகிறது. இடதுபண்புடைய ஒரு கட்சி குறைந்த பட்சம் பலமான எதிர்கட்சியாக மேலெழுவதைக் கூட மேற்படி நாடுகள் விரும்பாது. எனவே ஜேவிபியின் எழுச்சியைத் தடுப்பதற்கு ரணிலைப் பலப்படுத்த வேண்டும். அதனால் நிபந்தனைகளைப் போட்டு அவரைப் பலவீனப்படுத்த மேற்கு நாடுகள் தயாரில்லை.

அதாவது ஜே.வி.பி தான் இப்பொழுது ரணிலுடைய பலம். எப்படியென்றால் ஜேவிபி மற்றும் ஜேவிபியிலிருந்து பிரிந்து சென்ற முன்னிலை சோசலிஸக் கட்சி போன்றன முன்னெடுத்த அரகலய போராட்டத்தின் விளைவாகவே ரணிலுக்கு பதவி கிடைத்தது. இப்பொழுது ஜேவிபி பலமடைவதைத் தடுப்பதற்கு ரணிலைப் பலப்படுத்த வேண்டிய தேவை மேற்கு நாடுகளுக்கும் மேற்கத்திய நிதிமுகவர் அமைப்புகளுக்கும் இந்தியாவுக்கும் ஏற்பட்டிருக்கிறது. ஜேவிபி அச்சுறுத்தலான ஒரு சக்தியாக இருக்கும் வரை அவர்கள் ரணிலைப் பலப்படுத்துவார்கள்.

ஒவ்வொரு வெளிநாட்டுக்கும் அதனதன் பயம். இதில் தமிழ்மக்களின் பயத்தை யார் பொருட்படுத்துகிறார்கள்? நாட்டின் பொருளாதார நெருக்கடியை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரு வாய்ப்பாக பயன்படுத்த வேண்டும் என்று தமிழ் மக்கள் கேட்கக் கூடும். ஆனால் பிராந்தியப் பேரரசுகளும் உலகப் பேரரசுகளும் அதனை தமக்குக் கிடைத்த ஒரு ராஜதந்திர வாய்ப்பாகக் கருதிக் கையாள்வதாகத் தெரிகிறது.

இலங்கை நொடிந்து போயிருக்கும் காலகட்டத்தில் உதவிகளின் மூலம் இலங்கையை எப்படித் தம் வசப்படுத்தலாம் என்று தான் எல்லாப் பேரரசுகளும் சிந்திக்கின்றன. ஏற்கனவே சீனாவின் கடன் பொறிக்குட் சிக்கியிருக்கும் ஒரு நாட்டை எப்படி ஐஎம்எப்பின் கடன் பொறிக்குள் வீழ்த்துவது என்று மேற்குநாடுகள் சிந்திக்கின்றன. இப்படியாக பேரரசுகள் இலங்கைத்தீவின் பொருளாதார நெருக்கடியை ஒரு ராஜதந்திர வாய்ப்பாக பயன்படுத்த தொடங்கினால், உதவிகளையும் இனப் பிரச்சனைக்கான தீர்வையும் ஒன்றுடன் ஒன்று பிணைப்பதற்கான வாய்ப்புகள் மேலும் பலவீனமடையும்.

மேலும் ரணில் மேற்கத்தியப் பாரம்பரியத்தில் வந்த ஒரு தலைவர்.ஐஎம்எஃப் போன்ற நிறுவனங்களை ஏற்கனவே கையாண்டவர்.எனவே ஏற்கனவே பரிச்சயமான ஒருவரோடு விவகாரங்களை கையாள்வது இலகுவானது என்றும் மேற்கு நாடுகளும் ஐ.எம்.எஃப்பும் கருதக்கூடும்.

அதனால் நாட்டில் இப்போதுள்ள நிலைமைகளில் ஒப்பீட்டளவில் ரணில் பரவாயில்லை என்று மேற்கு நாடுகள் கருதுவதாகத் தெரிகிறது.

அது மட்டுமல்ல, ராஜபக்சக்களைப் பொறுத்தவரை ரணிலை விட்டால் வேறு பாதுகாப்புக் கவசம் இல்லை. வேறு பொருத்தமான பினாமியும் இல்லை. ராஜபக்சக்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் மதிப்பிழந்து காணப்படுகிறார்கள்.



எனவே அவர்கள் தங்களைப் பலப்படுத்திக் கொள்ளும் வரை குறிப்பாக நாமல் ராஜபக்சவை அடுத்த தலைவராகக் கட்டியெழுப்பும் வரை நிலைமைகளைக் கையாள்வதற்கு ஒப்பீட்டளவில் பொருத்தமான பினாமி ரணில் தான். இப்படிப் பார்த்தால், உள்நாட்டில் ராஜபக்சங்களுக்கு பொருத்தமான பினாமி ரணில் தான்.வெளியே மேற்கத்திய நாடுகளுக்கும் ஐஎம்எஃப்பிற்கும், உலக வங்கிக்கும் ரணில் ஒப்பீட்டளவில் பரவாயில்லை. எனவே உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தனக்கு இப்பொழுது மவுசு அதிகரித்து வருவதை ரணில் உணர்கிறார். மேலும் கடந்த மாதத்தோடு அவருக்கு நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரமும் கிடைத்து விட்டது. எனவே, நிறைவேற்று அதிகாரம், மேற்கத்திய ஆதரவு, ராஜபக்சக்களின் தங்கு நிலை, ஆழங்காண முடியாத தந்திரம், வாழ்வின் இறுதிக் கட்டத்திலாவது சாதிக்க வேண்டும் என்ற ஆவேசம்...போன்ற எல்லாவற்றினதும் கூட்டுக் கலவையாக அவர் காணப்படுகிறார்.

உள்நாட்டில் தனக்கு மக்கள் ஆணை இல்லை என்பதும் தனது கட்சி பெருமளவுக்குச் சிதைந்து போய்வ ிட்டது என்பதும் அவருக்குத் தெரிகிறது. பொருளாதாரத்தை ஒப்பீட்டளவில் நிமிர்த்தினால் தான் தன்னையும் நிமித்தலாம், தனது கட்சியையும் நிமிர்த்தலாம், சஜித்தையும் உடைக்கலாம் என்று அவருக்குத் தெரியும். பொருளாதாரத்தை நிமிர்த்துவது என்றால் மேற்கு நாடுகளின் நிபந்தனைகளுக்கு ஒத்துப் போக வேண்டும். மேற்கின் நிபந்தனைகளுக்கு கீழ்ப்படிவதென்றால் உள்நாட்டில் எதிர்ப்புகள் எழும். அந்த எதிர்ப்பைத் திசைத ிருப்ப அவருக்கு இனவாதம் தேவை. அதைத் தான் அவர் செய்கிறார். அதுவும் ஜெனிவாக கூட்டத்தொடர் காலகட்டத்திலேயே செய்கிறார்.

ஆனால் தமிழ் மக்களோ அதற்கு எதிராகக் காட்டிய எதிர்ப்பு ஒப்பீட்டளவில் பலவீனமானது. வெடுக்குநாறி மலையில் சிதைக்கப்பட்ட சிவனாலயத்துக்கு நீதி கேட்டுத் திரண்ட மக்கள் தொகையை விடவும் நாவற்குழியில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள பௌத்த விகாரைக்கு கலசம் வைப்பதற்காக வந்த சிங்கள மக்களின் எண்ணிக்கை அதிகம் என்று யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு செய்தியாளர் சொன்னார்.

சிங்களபௌத்த மயமாக்கலுக்கு எதிராக தமிழ்மக்கள் பலமான ஒரு திரட்சியைக் காட்ட முடியாமல் இருக்கிறார்கள். இதுவும் அரசாங்கத்துக்குத் துணிச்சலை கொடுக்கிறது.

ஒருபுறம் தென்னாபிரிக்கப் பாணியில் உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஓர் ஆணைக் குழுவை உருவாக்க அரசாங்கம் முயற்சிக்கின்றது. இன்னொருபுறம் ஜெனிவா கூட்டத் தொடர் நடந்து கொண்டிருக்கும் பொழுதே தமிழ் மக்களே கோபப்படுத்துகின்றது. ஒருபுறம் ஐ.எம்.எஃப்பின் நிபந்தனைகளை நிறைவேற்றுகிறது. இன்னொரு புறம் அதற்கு எதிராகக் கிளர்ந்து எழும் சிங்கள மக்களைத் தமிழ் மக்களின் மீது திருப்பி விடுகிறது. ஒரு பிரச்சினையை இன்னொரு பிரச்சினையால் அடித்து விடுவது.அல்லது ஒரு புதிய பிரச்சினையை உருவாக்கி அதன் மீது மக்களின் கவனத்தைத் திசை திருப்புவது. ஆக மொத்தம் ரணில் விக்ரமசிங்க அடுத்த ஜனாதிபதியாக வருவது என்று தீர்மானித்து உழைக்க தொடங்கி விட்டார்.

# Bolton Honda

65 Pillsworth Road, Bolton, ON, L7E 4E9

**Lease from 4.08% on select 2023 models**

## LEASE TO OWN



$93 weekly - Plus TAX

$0 down @ 6.58%

LEASE FOR 60 MONTHS - 20,000 km/yr

CANADIAN BUILT

**2023 CIVIC LX Model**



## LEASE TO OWN

$120

weekly - Plus TAX

LEASE FOR 60 MONTHS - 20,000 km/yr - 7.59%

**2023 CR-V**

## USED VEHICLES

Over 100 USED Vehicles

HONDA | TOYOTA
LEXUS | ACURA
BMW | AUDI

## 2023 CR-V HYBRID Available

**CIVIC** 20 in stock

**CR-V** 15 in stock

**ACCORD** 10 in stock

**ODYSSEY** 10 in stock

NO CREDIT BAD CREDIT NO PROBLEM!

HONDA certified used vehicles come with 7 Years or 160,000 km Warranty

புதிய பாவித்த வாகனங்களை தமிழில் உரையாடி மலிவு விலையில் பெற்றுக்கொள்ள அழையுங்கள்



tonymidtown@hotmail.com

**Tony Siva** 647.269.0749

Sales & Leasing Executive

# அரசியலில் தந்திரோபாயம் என்பது விரும்பியது கிடைக்கும் வரை கிடைத்ததை விரும்புவது

தமிழில் ஒரு கூற்றுண்டு. அதாவது, 'கழுதை தேய்ந்து கட்டெறும்பானது'. தமிழர்களின் அரசியலும் இன்று அப்படியானதொரு நிலையில் தான் இருக்கின்றது. ஆரம்பத்தில் சமஷ்டி, அதிலிருந்து தனிநாடு, பின்னர் மீண்டும் சமஷ்டி.. ஆனால் தமிழர் அரசியலின் உண்மையான நிலைமையோ, மாகாண சபையை முழுமையாக பயன்படுத்த முடிந்தாலே போதுமானதென்னும் நிலையில் தான் இருக்கின்றது.

அதாவது பிச்சை வேண்டாம் நாயை பிடியுங்கள்' என்று கூறுவதற்கு ஒப்பானது. ஆனால் இந்த உண்மையை வெளிப்படையாகக் கூறும் துணிவு பலரிடம் இல்லை. வாக்குகள் பறிபோய் விடுமோ என்று அச்சப்படும் அரசியல் வாதிகளால், சில விடயங்களை பகிரங்கமாக கூற முடியாமையை விளங்கிக் கொள்ளலாம். ஆனால் கருத்துருவாக்கங்களைச் செய்யும் அரசியல் சிந்தனையாளர், பத்திரிகையாளர் மற்றும் சமூக மட்டத்தில் மதிக்கப்படும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் ஆகியோரும் மதில்மேல் பூனைகளாக இருப்பது தான் துரதிர்ஷ்டவசமானது. இளைய தலைமுறையை வழி நடத்துவதில் இவர்களுக்கே தலையாய பொறுப்புண்டு. ஆனால் அவர்களோ தொடர்ந்தும் நடைமுறைச் சாத்தியமற்றகதைகளையே பெருமைப்படுத்த முயற்சிக்கின்றனர்.

ஈழத்தமிழ் தலைமைகளுக்கு போதுமான அரசியல் அனுபமுண்டு. இந்த அனுபவத்திலிருந்து சிந்தித்தாலே போதுமானது. ஆனால் அதற்கு பலரும் தயாராக இல்லை. இலங்கை தமிழரசுக் கட்சியின் ஆங்கிலப் பெயர் சமஷ்டிக் கட்சி. அதாவது, சமஷ்டியை அடைவது தான் தமிழரசுக் கட்சியின் இலக்கு. இந்த பின்புலத்தில் நோக்கினால், கடந்த 74 வருடங்களாக தமிழ் அரசியல் கட்சிகள் சமஷ்டி தொடர்பில் பேசி வருகின்றன. ஆனால் அடைய முடிந்ததா?

கடந்த 74 வருடங்களில் ஏராளமான அரசியல் ஆளுமைகளையும் அவர்களின் அரசியல் நகர்வுகளையும் நாம் கண்டிருக்கின்றோம். ஆனாலும் எதனையும் தமிழ் கட்சிகளால் பெற்றுக் கொடுக்க முடியவில்லை. இந்த பின்புலத்தில் நோக்கினால் கடந்த 74 வருட கால அரசியல் வரலாற்றில், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் கிடைக்கப் பெற்ற மாகாண சபை ஒன்று தான் நீடித்து நிலைத்திருக்கின்றது.

அன்றைய சூழலில் ஆயுத விடுதலை இயக்கங்களில் ஒன்றான ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஒன்று தான், மாகாண சபையை பொறுப்பேற்று நடத்திக் கொண்டு, அதிலிருந்து முன்னேற்றலாமென்னும் நிலைப்பாட்டைக் கொண்டிருந்தது. இந்தியாவின் ஆதரவுடன் அதனை சாத்தியப்படுத்த முடியுமென்று அவர்கள் உறுதியாக நம்பினர்.

ஆனால் 1989இல் பிரேமதாச ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து நிலைமைகள் தலைகீழாகின. இந்தியாவை தமிழர் பிரச்சினையிலிருந்து அப்புறப்படுத்த வேண்டுமென்பதில் விடுதலைப்புலிகளும் பிரேமதாசவும் உடன்பட்டுக் கொண்டதன் பின்புலத்தில் இந்தியா வெளியேற்றப்பட்டது. இந்தியாவின் வெளியேற்றம் என்பது அன்றைய சூழலில் யதார்த்தபூர்வமான அணுகுமுறைகள் அனைத்துக்குமான முற்றுப்புள்ளியாகும்.

விடுதலைப் புலிகளின் நம்பிக்கை வேறொன்றாக இருந்தது. அதனை அடைய முடியுமென்று அவர்கள் நம்பினர். விடுதலைப் புலிகள் தாங்கள் நம்பிய ஒன்றுக்காக அர்ப்பணிப்புடன் இயங்கினர். அதன் மீது மக்களும் நம்பிக்கை கொண்டிருந்தனர். ஒரு விடயத்திற்காக உயிரை கொடுத்துக் கொண்டிருக்கும் போது மக்கள் இயல்பாகவே அதன் பக்கமாகத் தான் இருப்பர். உயிரைக் கொடுப்பதற்கு சித்தமாக இருப்பவர்கள் கூறுவதைத் தான் சரியென்று நம்புவர். அது தான் அன்றைய சூழலில் இடம் பெற்றது.

ஈ.பி.ஆர்.எல்.எப் அமைப்பு கூறிய உண்மைகளை அன்று செவிமடுக்க



எவரும் தயாராக இருக்கவில்லை. நான் ஒரு முறை வன்னியில் நின்று கொண்டிருந்த போது, விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர் ஒருவர் என்னிடம் இவ்வாறு கூறினார், அதாவது, அண்ணன் நாங்கள் இன்றைக்கும் பலமாக இருக்கின்றோம் என்றால் அதற்கு எங்களுடைய தலைவர் தான் காரணம். அவருடைய முடிவுகள் பிழையென்றால் நாங்கள் அழிந்தல்லவா போயிருப்பம் என்றார் அந்த உறுப்பினர். நான் அதனை சரியென்றே ஏற்றுக்கொண்டேன்.

ஏனெனில் அவர் கூறியது தர்க்க ரீதியில் சரியாகத் தான் இருந்தது. ஏனெனில் அன்று விடுதலைப் புலிகள் பலமாக இருந்தனர். ஆனால் அந்த தர்க்கத்தை முன் வைத்து இன்று வாதிட முடியுமா? 2009இல் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்புலத்தில், அதுவரையான நமது நம்பிக்கைகளும், அரசியல் புரிதல்களும், நிலைப்பாடுகளும் தோற்றுவிட்டன.

இந்த பார்வையிலிருந்து சிந்தித்தால், இன்றைய சூழலில் மதில் மேல் பூனையாக இருக்க வேண்டியதில்லை. இன்றைய யதார்த்தங்களை நிமிர்ந்து எதிர் கொள்ள முடியும். ஆனால் பிரச்சினையோ இப்போதும் நம்மில் பலர், விடயங்களை கூனிக்குறுகியே எதிர் கொள்ள முற்படுகின்றனர். அரசியல் யதார்த்தங்களை கண்டு பயந்து நடுங்குகின்றனர். பலருக்கு சுய விமர்சனம் என்னும் சொல்லை கேட்டவுடனே, கை உதறுகின்றது. நாங்கள் அனைத்திலும் சரியென்றால் பின்னர் எவ்வாறு இவ்வாறனதொரு கோவண நிலை ஏற்பட்டது?

அரசியல் என்பது சூழ்நிலைகளை கையாளும் கலையாகும். சூழ்நிலைகள் நமது விருப்பங்களுக்குக் அமைவாக ஒரு போதும் இருக்கப் போவதில்லை. அதே போன்று அனைத்து விடயங்களிலும் நம்மோடு ஒத்துப் போபவர்கள், நமக்கு முன்னால் இருக்கப் போவதில்லை. ஆனால் நாமோ, நமக்கு விரும்பமில்லாத சூழலுடனும், பல சந்தர்ப்பங்களில் நமக்கு விருப்பமில்லாத நபர்களுடனுமே பணியாற்ற வேண்டியிருக்கும். அரசியலில் இந்த நிலைமை எப்போதுமே தவிர்க்க முடியாதது. இதன் காரணமாகத் தான் இந்தக் கட்டுரையாளர், எப்போதும் தந்திரங்களை முதன்மைப்படுத்தும் எழுத்தாளராக இருக்கின்றார்.

ஏனெனில் அரசியல் என்பது முற்றிலும் துறந்தவர்களின் பயணமல்ல. முற்றிலும் துறந்தவர்களுக்கே அரசியல் இருக்கும் காலம் இது. எனவே ஒவ்வொருவரும் தங்களுக்கான இலாபங்களை அடைவதற்கான கடைகளை திறக்கும் நோக்குடன் தான், நமது சூழலுக்குள் கால் வைப்பர். அவர்களுக்கான இலாப நட்டக் கணக்கின் அடிப்படையில் தான் அனைத்தையும் முன்னெடுப்பர். இது ஒரு அரசியல் யதார்த்தம்.

இந்த இடத்தில் ஒரு கேள்வி முன் வைக்கப்படலாம். அப்படியானால் அவர்களுடன் நாங்கள் எதற்காக பேச வேண்டும்? நாங்கள் சுயாதீனமாக செயற்படலாம் தானே. இது பற்றி கவிதையே எழுதலாம். அந்தளவுக நான் இதன் பெறுமதி. இந்த உலக அரசியல் ஒழுங்கில் சுயாதீனம் என்று எதுவுமில்லை. இன்று நாடு பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருக்கின்றது. இந்த பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள வேண்டுமாயின் ஏனைய நாடுகளிடம் தான் கையேந்த வேண்டும். அவ்வாறு உதவுகின்ற நாடுகள் தங்களுக்கான நலன்களையும் நிறுத்துப் பார்க்க முற்படும். நேரடியாவோ அல்லது மறைமுகமாவோ! பொருளாதார மீட்சில் சுயாதீனம் பற்றி பேசமுடியுமா? அரசியலும் அப்படித் தான்.

உண்மையில் அரசியல் தான் அனைத்தினதும் தாய். அரசியலில் எவரும் சுயாதீனமாக இருக்க முடியாது. தமிழ் ஆயுத இயக்கங்கள் எப்போது, தங்களின் இராணுவ ஆற்றலை பெருக்கிக் கொள்ள வெளியாரிடம் உதவிகளை பெற்றார்களோ, அப்போதே அன்னிய தலையீடுகள், நமது அரசியலுக்குள் நுழைந்து விட்டன. அதனை தடுக்கவும் முடியாது. ஆனால் இவ்வாறான சூழலை எவ்வாறு நமக்கு அதிகம் சேதமில்லாமல் சமாளிக்க முடியுமென்பது தான் கேள்வி. அவ்வாறு சமாளிப்பதில் தான் நமது கெட்டித்தனம் தங்கியிருக்கின்றது.

இந்தியாவின் நலன்கள் முன்னிலைப்படுத்தப்பட்டாலும் கூட கணிசமான அதிகாரங்களை தமிழ் மக்களுக்கு பெற்றுக் கொடுக்க வேண்டுமென்பதில் இந்தியா உறுதியான ஈடுபாட்டை காண்பித்தது. அதற்காக தமிழர்கள் கேட்கும் அனைத்தையும் இந்தியா பெற்றுக் கொடுக்க முடியாது. இப்போதும் நம்மில் சிலர், இந்தியா 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுழ்த்தக் கூடாது என்கின்றனர்.

இவ்வாறு கூறுபவர்களிடம் இந்தியா தொடர்பில் தெளிவான பார்வையில்லை அல்லது அதற்கு அவர்கள் முயற்சிக்கவில்லை. முன்னைய கட்டுரைகளில் குறிப்பிட்டவாறு இந்தியா ஈழத் தமிழர்களின் வேலையாள் அல்ல. நீங்கள் வா என்றால் வருவதற்கும் போ என்றால் போவதற்கும். இந்தியா ஒரு பிராந்திய சக்தி. ஒரு பக்தன் கடவுளிடமிருந்து கருணையை எதிர்பார்ப்பது போன்ற பக்குவத்துடன் தான், பலம் பொருந்திய நாடுகளை அணுக வேண்டும். பொறுமையை கடைப்பிடிக்க வேண்டும். நிலைமைகள் மாறும் வரையில் காத்திருக்க வேண்டும். வாய்ப்புகள் வரும்போது, அதனை பயன்படுத்திக் கொள்வதற்கான தயார்படுத்தல்களோடு இருக்க வேண்டும். விரும்பும் ஒன்று கிடைக்கும் வரையில் கிடைத்ததை விரும்ப வேண்டும். துதான் அரசியலுக்கான சூத்திரம். இந்தச் சூத்திரத்தை புரிந்து கொண்டால் ஒரு பொல்லாப்புமில்லை.

இலங்கையை மையப்படுத்தி வெளியாரின் தலையீடுகளின் எல்லையை எவ்வாறு விளங்கிக் கொள்ள வேண்டும்? உண்மையில் இலங்கையை மையப்படுத்திய அனைத்து வெளித் தலையீடுகளும் இலங்கை அரசை மையப்படுத்தியதாகவே இருக்கின்றது. ஹிட்லரின் நாசி பிரசார அமைச்சர் கூறியது போன்று, ஒரு பொய்யை திரும்பத் திரும்பக் கூறினால், அது உண்மையென்று நம்பப்படும் என்பது போல் நம்மில் சிலரும் சில விடயங்களை தவறாக முன் வைக்கின்றனர்.

அதனை தொடர்ந்தும் கூறுகின்ற போது அதனை மக்களும் உண்மை

**கட்டுரையாளர்:**
**தாயகத்தில் இருந்து**
**- யசீந்திரா -**



யென்று எண்ணிக் கொள்ளலாம். இலங்கையை மையப்படுத்தி வெளி நாடுகளின் நகர்வுகள் அனைத்துமே அரசை அடிப்படையாகக் கொண்டதாகவே இருக்கின்றது. நிச்சயமாக தமிழ் மக்களை கருத்தில் கொண்டு அவர்களது அணுகுமுறைகள் இருக்கவில்லை. இந்தியாவின அணுகுமுறையில் மட்டுமே தமிழ் மக்களுக்கு பிரத்தியேக இடமுண்டு.

வெளியாரின் முதலாவது கரிசனை சிங்களப் பெரும்பான்மையினை அடிப்படையாகக் கொண்டதாகவே இருக்கின்றது. ஏனெனில் சிங்கள பெரும் பான்மையை விரோதித்துக்



கொண்டால், அவர்களது நலன்களை இலங்கைத்தீவில் முன்னெடுப்பது கடினமாகும். இதற்கு இந்தியாவும் விதிவிலக்கல்ல அமெரிக்காவும் விதிவிலக்கல்ல. இந்த யதார்த்தத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இலங்கையை ஒரு நட்பு நாடாகக் கருதும் அணுகுமுறையே அனைவரிடமும் இருக்கின்றது. ஒரு நட்பு நாட்டின் மீது ஒரு கட்டத்திற்கு மேல் அழுத்தங்களை பிரயோகிக்க முடியாது.

பாகிஸ்தானை உடைத்தது போல், இலங்கைத்தீவை உடைப்பதற்கு இந்தியா உதவுமென்னும் பார்வையொன்று ஒரு காலத்தில் இருந்தது. செல்வநாயகம் தனிநாட்டுக் கோரிக்கையை முன் வைத்தமைக்குப் பின்னாலும் அப்படியொரு காரணம் இருப்பதாகவும் ஒரு பார்வையுண்டு.

செல்வநாயகம் தொடர்பான ஏ.ஜே.வில்சன் எழுதிய சுயசரிதையில் கூறப்பட்டிருக்கும் சில தகவல்கள் அவ்வாறான பார்வைக்கு வலுச் சேர்க்கின்றது. ஆனால் பாகிஸ்தான் வேறு இலங்கை வேறு என்பது தான் உண்மை. இலங்கைத்தீவின் ஒருமைப்பாட்டை பாதுகாக்க வேண்டுமென்னும் நோக்கமே அன்றிருந்து, அதுவே இன்றுவரையில் இந்தியாவின் கொள்கை நிலைப்பாடாக இருக்கின்றது. ஆனால் இந்தியாவின் நேரடியான தலையீட்டுக் காலத்தில், இந்திரா காந்தியின் ஆலோசகராகவும் இலங்கை விவகாரங்களுக்கான(22ம் பக்கம் பார்க்க)

## இது நம்ம யாழ்ப்பாணம் 19

# நெடுந்தீவில் கண் வைக்கும் தொல்லியல் திணைக்களம்

யாழ்நகரில் இருந்து ஈழநாட்டிற்காக
- பகிரதன் -

யாழ்ப்பாணத்துக்கு அழகு சேர்ப்பவற்றுள் முக்கியமானவை அதனைச் சுற்றியிருக்கும் தீவுகள் தான். சில நூற்றாண்டுகளுக்கு முன்னதாக யாழ்ப்பாணத்தின் காவலரணாகவும் இந்தத் தீவுகள் தான் இருந்திருக்கின்றன என்பதை வரலாற்றுக் குறிப்புக்கள் மூலமாக அறிய முடிகின்றது. குறிப்பாக நல்லூரில் யாழ்ப்பாண இராஜதானி இருந்த போது அதன் முன்னணிக் காவலரண்களில் ஒன்றாக இருந்தது நெடுந்தீவும் நெடுந்தீவிலிருந்து அரசாண்ட வெடியரசனும் தான் என்ற தகவல் ஒன்றுள்ளது.

யாழ்ப்பாணத்தின் காவலரண்களாகவுள்ள தீவுகளையும் காரைநகர் (அப்போது காரைதீவு) பூநகரி மற்றும் மன்னாரின் ஒரு பகுதியை தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்து ஆட்சி செய்தவன் தான் வெடியரசன். இந்தப் பின்னணியில் தான் வெடியரசன் முக்கியத்தும் பெற்றிருந்தார்.

யாழ்ப்பாணத்தை சுற்றியிருக்கும் தீவுகளில் பெரியதும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் இருப்பது நெடுந்தீவு தான். யாழ்ப்பாணத்திலிருந்து சுமார் 30 கிரோ மீட்டர் தொலைவிலும் குறிக்கட்டுவான் துறைமுகத்திலிருந்து சுமார் ஏழு கிலோ மீட்டர் தொலைவிலும் நெடுந்தீவு அமைந்திருக்கின்றது. இராமேஸ்வரத்திலிருந்து துறைமுகத்திலிருந்து சுமார் 38 கிலோ மீட்டர் தொலைவிலும் அமைந்திருக்கின்றது.

இந்தத் தீவு 8 கிலோ மீட்டர் நீளமும் ஆறு கிலோ மீட்டர் அகலமும் கொண்டது. அதாவது சுமார் 48 சதுர கிலோ மீட்டர் பரப்பளவைக் கொண்டது தான் நெடுந்தீவு. யாழ்ப்பாணத்தைப் போலவே இதுவும் சுமார் 2500 ஆண்டுகால வரலாற்றுத் தொன்மையைக் கொண்டது.

யாழ்ப்பாணத்திலிருந்து நெடுந்தீவுக்குச் செல்ல வேண்டுமானால் யாழ் நகரிலிருந்து குறிக்கட்டுவானுக்கு பஸ்ஸில் செல்ல வேண்டும். இது சுமார் ஒரு மணி நேர பயணம். குறிக்கட்டுவானிலிருந்து தினசரி காலை 8.00 மணி முதல் நெடுந்தீவுக்கு நான்கு படகுச் சேவைகள் உள்ளன. இறுதிப்படகு மாலை 4.00 மணிக்கு குறிக்கட்டுவானிலிருந்து புறப்படுகின்றது. இந்தப் படகுப் பயணமும் சுமார் ஒரு மணி நேரத்தைக் கொண்டது.



நெடுந்தீவுக்கு மேற்கில் கோட்டைக்காடு என்ற பகுதி அமைந்திருக்கின்றது. இங்கு தான் வெடியரசன் கோட்டை உள்ளது. இது சோழகால கட்டட முறைப்படி அமைக்கப்பட்டது. இங்கிருந்தே வெடியரசன் ஆட்சி நடைபெற்றதாகக் கூறப்படுகின்றது. ஆதற்கான ஆதாரங்கள் சிலவும் உள்ளன. வேடியரசன் காலத்தில் விவசாயத்துக்காக சிறு குளங்கள் அமைக்கப்பட்டன. விசாயமும் இங்கு செழிப்புற்றிருந்தது. இப்போதும் விவசாயம் கால்நடை வளர்ப்பு மீன்பிடி என்பன தான் நெடுந்தீவின் பிரதான தொழில்கள். போர்க்காலத்தில் நெடுந்தீவை தமது பாதுகாப்பான பகுதியாக ஈ.பி.டி.பி. பயன்படுத்திக் கொண்டது என்பது அண்மைக் கால வரலாறு.



நெடுந்தீவின் முக்கியத்துவம் என்ன என்று பார்த்தால் இது முழுமையாகவே தமிழ் மக்கள் வாழும் ஒரு பகுதி. இங்கு சிங்கள மக்களோ முஸ்லிம் மக்களோ இல்லை. இந்துக்களும் கிறிஸ்தவர்களும் மட்டும் தான் இருக்கின்றார்கள். சுமார் 15 இந்துக் கோவில்களும் தேவாலயங்களும் இங்குள்ளன. பெரும்பாலான கோவில்களில் நித்திய பூசைகள் இடம் பெறுகின்றன. கும்பாவிஷேகம் திருவிழா என்றால் புலம்பெயர்ந்த நெடுந்தீவு மக்கள் பெருமளவுக்கு வருகின்றார்கள். இவ்வாறு வருபவர்கள் அதிகளவுக்கு ஹொட்டல்களில் தான் தங்குகின்றார்கள். காரணம் அவர்களுடைய வீடுகள் அழிவடைந்திருப்பதுடன் அவற்றில் வசிக்க முடியாத நிலையும் காணப்படுகின்றது. அதாவது பல வீடுகள் பராமரிப்பில்லாமல் பாழடைந்திருக்கின்றது.

நெடுந்தீவின் இரண்டாவது முக்கிய அம்சம் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த பல பகுதிகள் இங்குள்ளன. ஒல்லாந்தரின் வரலாற்றுச் சின்னங்கள் பல இங்குள்ளன. முக்கியமாக ஒல்லாந்தரின் கோட்டை சிதைவடைந்த நிலையில் இங்கு காணப்படுகின்றது. மீகனம் கோட்டை என்று இது அழைக்கப்படுகின்றது. ஒல்லாந்தர் காலத்து நீதிமன்ற சிதைவுகள் மருத்துவமனைக் கட்டடம் என்பன உல்லாசப் பயணிகளைக் கவரக்கூடியவை. ஆவற்றுடன் ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் செய்திகளை அனுப்புவதற்காக அவர்கள் பயன்படுத்திய புறா கூடும் இங்கு காணப்படுகின்றது.

பாரிய ஆலமரம் - அதற்குள் உள்ள பொந்துக்குள் சுமார் பத்துப் பேர் சென்று வர முடியும். இதனை விட குதிரைகளைப் பராமரிப்பதற்கான பாரிய இடம் மற்றும் அனுமாரின் எனக் கருதப்படும் பெரிய காலடையாளம் அழகிய கடற்கரை என்பன நெடுந்தீவுக்கு மக்களைக் கவரும் இடங்கள்.

இந்தப் பின்னணியில் தான் அமைதியாக இருந்த நெடுந்தீவில் இப்போது புதிய சர்ச்சை ஒன்று உருவாகியிருக்கின்றது. நெடுந்தீவிலுள்ள வெடியரசன் கோட்டைக்கு அருகிலுள்ள தமிழ் பௌத்த எச்சத்தின் வரலாற்றை திரிவுபடுத்தி இலங்கை கடற்படை தகவல் பலகை ஒன்றை நாட்டியுள்ளதையடுத்தே அங்கு ஒரு பதற்ற நிலை உருவானது.

குறித்த பகுதியில் நாட்டப்பட்டிருந்த தகவல் பலகையை யாரோ அகற்றி விட்டதால் சரியான தகவல்களுடன் பதாகையை வைக்குமாறு தமக்கு கூறப்பட்டதால் அந்த பலகையை வைத்துள்ளதாக கடற்படை தரப்பில் இருந்து விளக்கம் கொடுக்கப்பட்டது.

வெடியரசன் கோட்டை 2007ஆம் ஆண்டு வர்த்தமானி மூலம் தொல்பொருள் சின்னமாக அடையாளப்படுத்தப் பட்டுள்ளது. அதற்கு அருகில் சுமார் 50 மீற்றர் தொலைவில் தமிழ் பௌத்த ஸ்தானத்தின் எச்சங்கள் 3 இடங்களில் காணப்படுகின்றன. அவை 2011ஆம் ஆண்டு டிசம்பர் மாதமே தொல்பொருள் சின்னங்களாக வர்த்தமானியிடப்பட்டன.

இந்த நிலையில் கடற்படையினரால் வெடியரசன் கோட்டைக்கு அருகிலுள்ள பௌத்த ஸ்தானத்துக்கு அண்மையாக சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் தகவல் பலகை வைக்கப்பட்டுள்ளது. இரண்டு வாரங்களுக்கு முன்னதாக இது இரவோடிரவாகக் கொண்டு வந்து வைக்கப்பட்டது.

அதுவும் வரலாற்றை திரிவுபடுத்தும் விதமாக தவறான தகவல்களே காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. 'சிங்கள பிராகிருத மொழி எழுத்து இங்கு உள்ளதாகவும் சிங்கள பௌத்தத்துக்குரிய எச்சம் காணப்படுவதாகவும் அந்தத் தகவல் பலகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் அது தவறானது என்றும் வரலாற்றை திரிபுபடுத்துவதாகவும் முன்னாள் வரலாற்றுத்துறை பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் சுட்டிக்காட்டியிருந்தார்.

அங்கு காணப்படுபவை 14 — 15ஆம் ஆண்டு நூற்றாண்டுக்குரிய தமிழ் மொழியில் எழுதப்பட்ட கல்வெட்டுக்கள். சில தமிழ்ச் சொற்களை எழுதுவதற்கு கிரந்த எழுத்துக்களைப் பயன்படுத்தியிருக்கின்றார்கள் கல்வெட்டு மூலாதாரத்திலிருந்து அங்கு எழுப்பப்பட்ட பௌத்த ஸ்தானம் தமிழருக்குரியது என்பது தெரிய வருகின்றது என்று புஸ்பரட்ணம் தெரிவிக்கின்றார்.

இதேவேளை– அங்கு வைக்கப்பட்ட தகவல் பலகையை தொல்பொருள் திணைக்களமே நட்டுள்ளதாக முன் வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களை தொல்லியல் திணைக்களம் மறுத்துள்ளது. நெடுந்தீவு பிரதேச செயலகம் மற்றும். பிரதேசசபை என்பனவும் அதனைத் தாம் வைக்கவில்லை என மறுத்துள்ளன.

இதற்கிடையில் இலங்கைக் கடற்படையினர் தாம் நட்டுள்ள அந்தத் தகவல் பலகையை அகற்ற வேண்டாம் என நெடுந்தீவு பிரதேசசபையிடம் கோரியுள்ளதாக முன்னாள் தவிசாளர் நல்லதம்பி சசிக்குமார் தெரிவித்துள்ளார்.

முறையான அனுமதிக்கு விண்ணப்பிக்கும் போது தகவல் பலகையிலுள்ள விடயங்கள் சரியானவையா என்று தொல்பொருள் திணைக்களத்திடம் உறுதிப்படுத்திய பின்னரே காட்சிப்படுத்த அனுமதிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை– கடற்படையின் பேச்சாளர் இணைய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் இலங்கை அரசாங்கத்தால் புராதன முக்கியத்துவம் வாய்ந்த இடமாக வர்த்தமானி அறிவித்தலில் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் வெடியரசன் கோட்டையில் எந்தவொரு சட்ட விரோதமான நடவடிக்கைகளையும் கடற்படையால் முன்னெடுக்க முடியாது. வெடியரசன் கோட்டையில் ஏற்கெனவே வைக்கப்பட்டிருந்த அறிவித்தல் பலகை சில தரப்பினரால் அகற்றப்பட்டுள்ளது. அதனை யார் செய்தார்கள் என்று எனக்குத் தெரியாது என்று தெரிவித்திருந்தார்.

யாழ்ப்பாணத்தில் தொல்பொருளியல் திணைக்களத்தின் அலுவலகங்கள் ஏதும் இல்லாத காரணத்தால் அறிவித்தல் பலகையை மீண்டும் அதே இடத்தில் வைக்குமாறு எமக்கு அறி வுறுத்தப்பட்டது. அதற்கேற்ப அறிவித்தல் பலகை வைக்கப்பட்டது. தற்போது சிங்கள மற்றும் ஆங்கில மொழிகளில் மாத்திரம் வைக்கப்பட்டிருக்கும் இந்த அறிவித்தல் பலகைகளை தமிழ்மொழியிலும் வைக்க 'சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடி தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இருந்த போதிலும் அந்த அறிவித்தல் பலகை அந்த இடத்திலிருந்து பொது மக்களால் பிடுங்கி எறியப்பட்டுள்ளது. ஆதன் பின்னர் என்ன நடைபெற்றது என்பதை அடுத்த வாரம் பார்ப்போம்.

# சஜித் அணியை உடைக்கும் ரணிலின் அரசியல் உபாயம்

## 3 வருடங்களுக்கு முன்னர் காணாமல் போன ரணில் இப்போது விஸ்வரூபம் எடுத்துள்ளார்!

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- பார்த்தீபன் -

சிறுபான்மையினக் கட்சிகளின் பிரதிநிதிகளை சில தினங்களுக்கு முன்னர் சந்தித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தான் எடுத்துள்ள முக்கியமான அரசியல் முடிவு ஒன்று குறித்து அவர்களுக்குத் தெரியப்படுத்தியிருக்கின்றார். அடுத்த வருட (2024) முற்பகுதியில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என்பதும், அதில் தான் போட்டியிடப் போவதாகவும் அவர் தெரிவித்திருக்கின்றார். இது தொடர்பாக தேர்தல் திணைக்களத்துடன் ஆலோசனை நடத்த விருப்பதாகவும் அவர் கூறியிருக்கின்றார். ஜனாதிபதித் தேர்தல் தான் அடுத்ததாக நடைபெறும் என்பதும், அதில் ரணில் களமிறங்குவார் என்பதும் கடந்த சில வாரங்களாகவே ஊடகச் செய்திகளாக வெளி வந்து கொண்டிருந்தது. இப்போது தான் முதல் முறையாக ரணில் விக்கிரமசிங்கவே அதனை உறுதிப்படுத்தியிருக்கின்றார். உள்ளுராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களை தொடர்ச்சியாகவே ஒத்தி வைப்பதில் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெற்றிருக்கின்றார். அதற்கு எதிராக உருவாகிய எதிர்ப்புக்களை முறியடிப்பதிலும், அவர் வெற்றி பெற்றிருக்கின்றார்.

உள்ளுராட்சித் தேர்தல்களை தற்போதுள்ள நிலையில் நடத்தினால், ஜே.வி.பி.யும் ஐக்கிய மக்கள் சக்தியும் தான் அதிக வாக்குகளைப் பெற்றுக் கொள்ளும் என்பது சுயாதீன கருத்துக் கணிப்புக்கள் மூலமாக உறுதிப்படுத்தப்பட்டதையடுத்தே அந்தத் தேர்தலை இப்போதைக்கு நடத்துவதில்லை என்ற முடிவை ரணில் எடுத்தார். உள்ளுராட்சி மட்டத்தில் ரணிலின் ஐ.தே.க. செல்வாக்கிழந்திருக்கின்றது. கடந்த பொதுத் தேர்தல் தோல்வியுடன் அதன் கட்டமைப்புக்களும் குலைந்து போயிருக்கின்றன. அதே போல பொதுஜன பெரமுனவும் மக்கள் மத்தியில் செல்லக் கூடிய நிலையில் இல்லை.

இவ்வாறான ஒரு பின்னணியில் உள்ளுராட்சி மன்றங்களுக்கான தேர்தல் முடிவுகள் தமக்கு பாதகமாக வருமாயின் ஐக்கிய மக்கள் சக்தியும், ஜே.வி.பி.யும் தம்மைப் பலப்படுத்த அதனைப் பயன்படுத்திக்கொள்வார்கள் என்பது ரணிலுக்குத் தெரியும். அதனைத் தடுக்க வேண்டுமாயின் நிதிப் பிரச்சினைளை காரணம் காட்டி உள்ளுராட்சித் தேர்தலை ஒத்தி வைப்பது தான் ரணிலிடமிருந்த உபாயம். அதனை அவர் தொடர்ச்சியாக செய்து வருகின்றார்.. பொருளாதார நெருக்கடி ஓரளவுக்கு தீர்ந்துள்ளது போன்ற ஒரு நிலை காணப்படுவதால், ரணிலுக்கு எதிராக மக்களை அணி திரட்டவும் பிரதான எதிரணிகளால் முடியவில்லை.

ஜே.வி.பி.யைப் பொறுத்தவரையில் அரகலய போராட்டத்தினால் அவர்களது கட்சி பலமடைந்துள்ளது உண்மை தான். போராட்டங்களை ஒழுங்கமைப்பதில் அவா்களுக்கு நிகராக வேறு ஒருகட்சி இல்லை என்பதும் உண்மை தான். கீழ் மட்டங்களிலும், கிராம மட்டங்களிலும் பலமான கட்டமைப்புக்களை யுடைய கட்சியாக அவர்களுடைய கட்சி இருக்கின்றது. ஆனால், தேசிய அளவில் ஜே.வி.பி. ஆட்சியைக் கைப்பற்றக் கூடிய ஒரு கட்சியாக தன்னை இதுவரை வெளிப்படுத்தவில்லை. மக்களும், தற்போதைய நெருக்கடிகளுக்குத் தீர்வைத் தரக்கூடிய ஒரு கட்சியாக ஜே.வி.பி.யை பார்க்கவில்லை.

அதேபோல சஜித் பிரேமதாஸவின் ஐக்கிய மக்கள் சக்தி தினசரி பொதுக்கூட்டங்களை ஏற்பாடு செய்து அரசுக்கு எதிரான பிரச்சாரங்களை தீவிரமாக முன்னெடுத்தாலும்கூட, ஒரு மாற்று அரசாங்கத்தை அமைக்கக் கூடிய கட்சியாக அது காணப்படவில்லை. கட்சிக்குள் உருவாகியிருக்கும் தலைமைத்துவப் போட்டி, சிறுபான்மையினக் கட்சிகளின் அதிருப்தி என்பன சஜித் உள்ளுராட்சி மன்றங்களில் செல்வாக்கை காட்டினாலும், ஜனாதிபதித் தேர்தல் ஒன்றில் தன்னை முன்னிலைப்படுத்தி வெற்றி பெறும் ஆளுமையைக் கொண்ட ஒருவராக அவரைக் காட்டவில்லை.

ராஜபக்ஷக்களுக்கு எதிரான போராட்டங்களால் துவண்டு போய் கிடக்கும் பொதுஜன பெரமுன மற்றொரு தேர்தலை சந்திக்க தயாராக இல்லை. கட்சிக்குள் உருவாகியிருக்கும் உள்கட்சி - சகோதர முரண்பாடுகளும் மொட்டு அணியை மேலும் பலவீனப் படுத்தியிருக்கின்றது. தற்போது நாடாளுமன்றத்தில் தமக்குள்ள பெரும்பான்மையுடன் காலத்தை கடத்துவது தான் அவர்களுடைய உபாயம்.

இந்த நிலைமைகள் அனைத்தையும் புரிந்து கொண்ட ஒருவராகவே ரணில் விக்கிரமசிங்க இப்போது காய் நகர்த்துகின்றார். சர்வதேச நாணய நிதியத்தின் நிதி உதவி கிடைத்திருப்பதும், மேற்கு நாடுகளின் ஆதரவும் அவருக்கு மேலும் பலத்தைக் கொடுத்திருக்கின்றது. இதன் மூலமாக அத்தியவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடு நீக்கப்பட்டிருக்கின்றது. குறிப்பிட்ட சில பொருட்களுக்கான விலைகளும் குறைக்கப்பட்டுள்ளன. இதனால் உள்ளுராட்சி மன்றத் தேர்தல்களை நடத்தவில்லை என்பதற்காக ரணிலுக்கு எதிராக மக்களை அணி திரட்ட எதிரணியினரால் முடியவில்லை. இந்தப் பின்னணியில் தான் சிறுபான்மையினக் கட்சி எம்.பி.க்கள் சிலரை சந்தித்த ரணில் விக்கிரமசிங்க, நாட்டின் பொருளாதார நிலை முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருக்கின்றது. சில மாதங்களுக்கு முன்னர் இருந்ததை விட இப்போது சிறப்பான நிலையில் நாட்டின் பொருளாதாரம் உள்ளது. பொருளாதார நிலை மேலும் ஸ்திரமடைந்ததையடுத்து அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளுடனும் பேச்சுக்களை நடத்தி ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவித்தலை வெளியிடுவேன் என்று தெரிவித்திருக்கின்றார்.

இதனை விட மற்றொரு தகவலையும் ஜனாதிபதி வெளியிட்டிருக்கின்றார்.. எதிரணியிலுள்ளவர்கள் விரும்பினால், கட்சியாகவே வந்து அரசாங்கத்துடன் இணைந்து கொள்ளலாம். கட்சித் தலைமை அதனை விரும்பவில்லை என்றால், அவர்கள் தனிப்பட்ட முறையில் கட்சி மாறலாம். அரசாங்கத்துடன் இணைந்து கொள்ளலாம் என்ற அவரது கருத்து கொழும்பு அரசியலை சூடாக்கியிருக்கின்றது. நாடாளுமன்றத்தில் தனக்கு போதுமான பெரும்பான்மை இருப்பதால், எதிரணியினரை தமது பக்கத்துக்கு இழுக்க வேண்டிய அவசியம் எதுவும் தமக்கு இல்லை என்றும் ஜனாதிபதி கூறியிருக்கின்றார்.



பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் அரசாங்கத்துடன் இணையவுள்ளார்கள் என்ற தகவல் கொழும்பு அரசியலில் பரபரப்பாக பேசப்படும் நிலையில் தான் ஜனாதிபதி இந்த அறிவித்தலை வெளியிட்டிருக்கின்றார். ராஜித சேனாரட்ன அரசுக்கு ஆதரவளிக்கத் தயாராக இருப்பதாக பகிரங்கமாகவே அறிவித்திருக்கின்றார்.

அவரைவிட சஜித் அணியிலுள்ள மேலும் சில எம்.பி.க்கள் கட்சி தாவுவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாகவும் சொல்லப்படுகின்றது. ரணிலின் பொருளாதாரக் கொள்கைகளை அண்மைக் காலமாக அவர்கள் புகழ்ந்து வருகின்றார்கள் என்பதும் கவனிக்கத்தக்கது.

சஜித் பிரேமதாஸவுடன் தொடர்ந்தும் இருப்பதால், தமது அரசியல் எதிர்காலம் பாதிக்கப்படலாம் என்ற அச்சம் அவர்களுக்கு இருக்கின்றது. ஊடகங்கள் சமூக ஊடகங்களில் வெளியான தகவல்களின் அடிப்படையில் 20 முதல் 40 வரையிலான ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் கட்சி மாறுவதற்கான வாய்ப்புள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வருடம் பிரதமராக இரு ந்த மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவி துறந்த போது, எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் சஜித் பிரேமதாஸவுக்கே அந்தப் பதவி வழங்கப்படவிருந்தது. ஆனால், அப்போதிருந்த சூழ்நிலையில் அந்தப் பொறுப்பை ஏற்பதற்கு அவர் மறுத்து விட்டார். மோசமடைந்து சென்று கொண்டிருந்த பொருளாதார நிலை - மக்களின் கொந்தளிப்பு என்பவற்றுக்கு மத்தியில் பிரதமர் பதவியைப் பொறுப்பேற்று தன்னால் சாதிக்க முடியாமல் போய் விட்டால் என்ற அச்சம் தான் அதற்கு காரணம். தன்னுடைய ஆளுமையை நிரூபிக்க அவருக்கு கிடைத்த அந்த சந்தர்ப்பத்தை அவர் தவற விட்டது கட்சியிலும் அவரது தலைமைத்துவம் மீதான நம்பிக்கையைக் குறைத்து விட்டது. ரணில் அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டார்.

ஜனாதிபதித் தேர்தலுக்குச் சென்று அடுத்ததாக பொதுத் தேர்தலுக்குச் செல்வது தான் ரணிலின் உபாயம். அதற்கு முன்னர் சஜித் அணியிலிருந்து கணிசமானோரை உடைப்பதற்கு அவர் திட்டமிடுகின்றார். மொட்டு அணியிலிருந்தும் சிலர் ரணிலுடன் இணையலாம். அவற்றை விட மலையக, முஸ்லிம் கட்சிகளின் உறுப்பினர்களும் ரணிலுக்கு ஆதரவளிப்பதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

தமது கட்சியிலிருந்து யாரும் கட்சி மாற மாட்டார்கள் என்று தெரிவித்திருக்கும் சஜித், தமது கட்சி உறுப்பினர்களுடன் கட்சி மாறுவதற்கான பேரம் இடம் பெறுவதாகவும் 200 மில்லியன் வரையில் இதற்காக பேரம் பேசப்பட்டுள்ளதாகவும் சொல்லியிருக்கின்றார். யாராவது கட்சி மாறினாலும் 200 மில்லியனுக்காகத் தான் மாறினார்கள் என பின்னர் சொல்வதற்கு வாய்ப்பாக இவ்வாறான அறிவிப்பை அவர் இப்போதே வெளியிட்டுள்ளார்.

கொழும்பு அரசியலில் காணாமல் போய் விடுவார் என மூன்று வருடங்களுக்கு முன்னர் சொல்லப்பட்ட ரணில் விஸ்வரூபம் எடுத்திருப்பதையே இப்போது காணமுடிகின்றது.

இன்னும் 10 நாட்களில்
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின்
30வது ஆண்டு விழா
23 ஏப்ரல் 2023 ஞாயிற்றுக்கிழமை
கலைமாமணி ராஜேஸ் வைத்தியாவின்
இசைச்சங்கமம் 2023
டிக்கட் விபரங்களுக்கு 416 841 9600

# ஈழத்தமிழர் நவீன தேசியத்தை நோக்கி நகர வேண்டும்!

கட்டுரையாளர்
யாழ்ப்பாணத்தில் இருந்து
பேராசிரியர்
K.T.கணேசலிங்கம்

இலங்கையின் அரசியல் போக்கானது இராணுவ ஆட்சிக்கான திட்டமிடலாக மாறுகிறதா என்ற சந்தேகத்தை தந்துள்ளது. குறிப்பாக புதிய பயங்கரவாத தடைச் சட்டம் இலங்கைப் பிரஜைகளின் அடிப்படை உரிமைகளை இல்லாமல் செய்யுமளவுக்கு வரையப்பட்டுள்ளதாகவே தெரிகிறது. அதற்கான எதிர்வினைகள் அதிகரித்த போதும் தமிழ் மக்கள் அதற்கான கவனத்தை குவித்துள்ளதாக தெரியவில்லை.

தமிழ் அரசியல்வாதிகள் வெளிப்படுத்தும் செய்திகள் தொடர்ச்சியானதாகவோ தாக்கம் செலுத்துவதாகவோ அமையவில்லாத நிலை காணப்படுகிறது. இது தமிழ் மக்களை மட்டுமல்ல ஏனைய இனங்களையும் பாதிக்கும் விடயமாக அமைந்திருக்கின்றது. சிங்கள சாதாரண மக்களும் அதன் அரசியல்வாதிகளும் தமிழர் மீது பயங்கரவாத தடைச் சட்டம் பிரயோகிக்கும் போது அது தமிழருக்கானதென்றே கருதினர்.

ஆனால் இலங்கைத்தீவில் ஆட்சிக்கும் அரசாங்கத்திற்கும் எதிரானதாக எந்த ,னமும் எழுச்சியடையும் போது அதற்கெதிராக அரச இயந்திரம் செயல்படும் என்பதை ஜே.வி.பி.இன் ஆயுதப் போராட்டத்தை அழிக்கும் போதே சிங்கள அரசியல்வாதிகளும் மக்களும் கண்டு கொள்ளவில்லை என்பது மீண்டும் ஒரு தடவை அதே துயரம் அரங்கேற தயாராகிறது. இதன் நெருக்குவாரத்திற்குள் தமிழரின் தேசியம் பிரதேச வாதத்தையும் மத வாதத்தையும் சாதி வாதத்தையும் அரங்கேற்றுவதில் முனைப்புச் செலுத்தி வருகிறது. பயங்கரவாத தடைச் சட்டத்தை விடவும் மதவாதம் அதிக எதிர்ப்பு வாதமாக மாறத் தொடங்கியுள்ளது. தமிழர் மத்தியில் அக முரண்பாடுகளை தூண்டும் விதத்தில் மௌனமாக பிரசாரமும் செயல்பாடுகளும் நகர்த்தப்படுகின்றன.

தேசியவாதத்தால் ஒன்றிணைந்திருந்த ஈழத்தமிழர் தமக்கிடையே அதிகம் முரண்பாடடையத் தொடங்கியுள்ளனர். 2000 வரை தேசம் தேசியம் மற்றும் தேசிய உணர்வால் பிணைக்கப்பட்டவர்கள் பிரதேசவாதத்தால் துண்டாடப்பட்டார்கள், பெரும் ஆயுதப் போராட்டத்தை நிகழ்த்திய அமைப்பே குறிப்பாக இராணுவ பலமுடைய அமைப்பே பிரதேச உணர்வால் துண்டாடப்பட்டது.

அது போராட்டத்திற்கான அடிப்படையை தகர்த்தது. அத்தகைய நிலை ஒன்றுக்குள்ளேயே மீண்டும் தமிழர் தமது இருப்பு சார்ந்தும் தேசியம் சார்ந்தும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளனர். கிறிஸ்தவ மதத்திற்கு எதிராக இந்து மதமும் இந்து மதத்திற்கு எதிராக கிறிஸ்தவ மதமும் மோதிக் கொள்ளும் செய்திகளும் பிரசாரங்களும் தமிழர் தேசியத்தின் போலியைக் காட்டுவதாகவே தெரிகிறது. இதுவரை காலமும் தேசியத்தால் கட்டப்பட்ட அல்லது தேசிய உணர்வால் எழுப்பப்பட்ட வடக்கு, கிழக்குத் தமிழர்களது அரசியல் இவ்வளவு விரைவாக மதத்திற்குள் அடங்கிப் போகிறதென்றால் அதன் தேசிய இருப்பு பலவீனமானதாகவே உள்ளதென்பதை புரிந்து கொள்ள வேண்டும். தமிழர் தேசியம் உண்மையான அர்த்தத்தால் கட்டப்படாது போலியான நியதிகளால் கட்டப்பட்டுள்ளது என்பது தெளிவாகவே உணர முடிகிறது.

ஐரோப்பியரால் வடிவமைக்கப்பட்ட தேசியம் மனித நாகரிகத்தின் பிரதான வளர்ச்சிக் கட்டமாகவே உள்ளது. மனிதன் குழுவாக தங்களையும் மதவாதத்தையும் முடியாட்சி முறைமைகளையும் முடிவுக்குக் கொண்டு வந்த யுகமாக தேசிய யுகம் அமைந்திருந்தது, இனம், மதம், மொழி அல்லது பிரதேசம் இவற்றில் ஏதோவொன்றின் பெயரால் அல்லது இவற்



றில் பல கூட்டாவதன் பெயரால் ஒரு நேசியம் தனது குறியீட்டு அழைக்கலாம். ஜனநாயகம் என்பது தான் தேசியத்தின் சாராம்சமாகும்.

அதாவது 18ஆம் நூற்றாண்டிலிருந்தே தேசியம் எனும் அரசியற் பதம் உருப்பெற்றது. அதற்கு முன்பு ,னக் குழுக்கள் என்றும் மதக் குழுக்கள் என்றும் அழைக்கப்படடமை கவனிக்கத்தக்கது. இறைமை பற்றிய விடயத்தில் ஜனநாயகம் பற்றிய கருப்பொருள் தோற்றம் பெறவே தேசியம் என்பது இன, மத மக்கள் குழுக்களுக்குள் அவற்றின் எண்ணங்களைத் தோற்கடித்து பிரவேசம் செய்கிறது. இங்கு மக்களுக்கு அரசியல் தீர்மானம் எடுப்பதில் தேசியம் ஜனநாயகத்தின் பெயரால் பங்களிப்புச் செய்கிறது.

அதாவது மக்கள் திரட்சியே தேசியமாகும். அத்தகைய தேசிய எண்ணத்துடன் முதல் முதல் தோன்றிய தேசிய விடுதலைப் போராட்டம் அமெரிக்க சுதந்திரப் போராகும். 1776இல் முதலாவது அர்த்தத்தில் மன்னராட்சிக்கு எதிரானது. இரண்டாவது நிலையில் பிரித்தானியரது அல்லது ஆங்கிலேயரது ஆதிக்கத்திற்கு எதிரானது. அது அமெரிக்க மக்களின் திரட்சியினால் எழுந்த போராட்டமாகும்.

அது ஜனநாயக உரிமை கோரிய தேசிய விடுதலைப் போராட்டமாகும். தேசியம் என்பது இன, மத, மொழி வடிவங்களைக் கடந்து ஜனநாயகத்தின் ஊற்றாகவே விளங்கியது. அத்தகைய திரட்சி தமிழ் மக்களுக்கு அவர்களது வாழ்விடத்தாலும் மொழியாலும் கட்டமைக்கப்பட்டுள்ளது. தமிழர்களது வாழ்விடமே அவர்களது மொழிக்கான அடிப்படையைத் தந்துள்ளது. வடக்கு, கிழக்கில் வாழ்ந்த சைவர்களும் (தற்போது இந்துக்கள் என அழைக்க பலர் முயல்கிறார்கள்) வீர சைவர்களும் இல்லாமியர்களும் கிறிஸ்தவர்களும் பின்பற்றிய மொழி தமிழ் மொழியே. தமிழர்கள் வடக்கு, கிழக்கு தாயகம் என்பதனாலும் தமிழ் மொழி தாய் மொழி என்பதனாலும் தமிழ் தேசியத்தை மொழிவழி தேசியமாக வடிவமைத்தார்கள்.

வடிவமைக்கும் போது இஸ்லாமியர்களும் தமிழ் தேசியத்தின் ஓரங்கமாகத் திகழ்ந்தார்கள். தற்போது அவர்கள் தமிழ் தேசிய அங்கத்திலிருந்து விலகி வேறு ஒரு வடிவத்தை தமக்குரியதாக கட்டமைத்துள்ளனர். அதற்கு தமிழர்களது அரசியல் நகர்வுகளும் இஸ்லாமியர்களது அரசியல் நடவடிக்கைகளும் காரணமாக அமையும் அளவுக்கு சிங்களப் பெரும்பான்மை அரசியலும் செல்வாக்குச் செலுத்தியதாக தெரிகிறது. அத்தகைய இஇஸ்லாமியர்கள் வடக்கு, கிழக்கில் தமிழையும் தென்னிலங்கையில் சிங்களத்தையும் மொழியாகக் கொண்டுள்ளனர். அரபிய மொழியும் பிரயோக மொழியாக உள்ளது.

ஏறக்குறைய 70 வருடங்களுக்கு மேலாக தேசிய விடுதலைப் போராட்டத்தை நிகழ்த்திய தமிழர்கள் மிதவாத அரசியலிலும் ஆயுத அரசியலிலும் தமிழ் தேசியத்தையே நேசித்துள்ளார்கள் என்பது பொதுப் புரிதலாகும். தேசியத்தின் பெயரால் கட்சிகள், ஆயுதப் போராட்ட அமைப்புகள், தலைமைகள், தீர்மானங்கள் மற்றும் மக்கள் திரட்சிகள் என்பன காணப்பட்டன. அக்காலப்பகுதியில் தேசியத்தின் பெயராலேயே தியாகங்களும் அர்ப்பணிப்புகளும் நிகழ்த்தப்பட்டுள்ளன. புதைகுழிகள் ஒவ்வொன்றுக்குள்ளும் சைவனும் கிறிஸ்தவனும் தியாகச் சுடரானான், அதற்காக பல இலட்சம் மக்கள் கொல்லப்பட்டனர். எல்லையில்லாத படுகொலைகளையும் இன வன்முறைகளையும் கலவரங்களையும் எதிர்கொண்டார்கள். எல்லாவற்றுக்கும் அடிப்படையில் தமிழர் என்றொரு வடிவமே காரணமாக அமைந்தது.

கிறிஸ்தவனாக, சைவனாக, வீர சைவனாக அடையாளப்படுத்தி கொல்லப்படவும் இல்லை. கொலையிலிருந்து தவிர்க்கப்படவும் இல்லை. தமிழன் என்றொரு அடையாளத்நிற்காக படுகொலைகளும் துயரங்களும் எதிர்கொள்ளப்பட்டன. தற்போது தமிழ் மக்களாக கொல்லப்பட்டவர்களையும் நியாகிகளையும் நினைவு கொள்ள அரசிடமும் சர்வதேசத்திடமும் உரிமை கோருகிறது. தமிழ் இனம் கடந்தகால வெற்றிகளை மட்டுமன்றி தியாகங்களின் உச்சத்தை எண்ணி பெருமை கொள்கிறது.

இதன் அர்த்தங்கள் அனைத்தும் போலியானவையாகவே தெரிகிறது. கடந்த ஆண்டு மாவீரர் நாளில் தமிழ் மக்களின் திரட்சி பெரும் வியப்பினை தென்னிலங்கைக்கு மட்டுமல்ல உலகத்திற்கே தந்தது. அப்படியானால் அவை அனைத்தும் போலிகளா? தேசியத்தின் பெயரால் அவை எவையும் நிகழ்த்தப்படவில்லையா? அவை எதிலும் கிறிஸ்தவனும் சைவதும் ஒன்றாக நினைவு கொள்ளப்படவில்லையா? ஈழத்தமிழன் தமது புதிய தேசியத்தை கட்டமைக்கும் காலம் எழுந்துள்ளது.

நவீன வடிவத்தில் தமிழ் தேசியம் கட்டப்பட வேண்டும். தேசியம் என்பது பழமைகளையும் புராதனங்களையும் தோண்டி எடுப்பதல்ல. முடியையும் வாளையும் வீரத்தையும் மீளமைப்பதல்ல, அறிவியலால் கட்டமைக்கப்பட வேண்டியதே புதிய தமிழ்த் தேசியம். குறிப்பாக வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் குறியீடாக மொழி மற்றும் மதவாதமே முன்னிறுத்தப்பட்டிருந்தது. அது சாசி .வட்டார. நிலமானி .குழு நிலைப்பண்புகளை முறியடித்து ஒரு தேசியமாக உருப்பெறவில்லை. தனித்து மொழி மத பெருமைவாதமாகவே உருவானது. தேசியத்திற்கு இருக்கக்கூடிய பரந்த சமூக உருவாக்கத்தை கொண்டிருக்கவில்லை. பரந்த பொருளாதார கட்டமைப்பை உருவாக்கவில்லை. வடக்கு, கிழக்கு பிரதேசத்தை ஒன்றிணைக்கும் பொருளாதாரக் கட்டமைப்பு ஏற்படுத்தவில்லை. இரு பிரதேத்தையும் பிணைக்கும் வீதியமைப்புகளோ போக்குவரத்து வாய்ப்புகளோ உருவாக்கப்படவில்லை. சமூக-பொருளாதார கட்டமைப்பு பருத்தித்துறையிலிருந்து பொத்துவில் வரையும் உருவாக்கப்பட வேண்டும். இது வெறும் அரசியல் சுலோகமாக அமையாது இரு பிரதேச மக்களது வாழ்வின் உயிர்ப்பாக அமைய வேண்டும். தேசிய ஒருமைப்பாடு சமூக பொருளாதார கலாசார பிரதேச ஜனநாயக அம்சங்களில் ஏற்படுத்தப்பட வேண்டும். பரஸ்பரம் இரு பிரதேசங்களது வாழ்வும் சமூக பொருளாதார கலாசார் - ஜனநாயக அம்சங்களால் பிணைக்கப்பட வேண்டும். தமிழர்களின் போலித்தனமான விழுமியங்களும் பழமைவாதமும் இன, மத எதிர்ப்புவாதங்களும் நிலமானியப் பண்புகளும் ஜனநாயக தன்மையற்ற சமூக இயங்கு முறைகளும் வாழ்க்கை முறைகளும் துடைத்தொழிக்கப்பட வேண்டும்.

தேசியம் என்பதை ஜனநாயகத் தன்மை பொருந்தியதாகவும் அது சாமானியரை அரசியல் அதிகாரத்தில் சம பங்காளியாக்குவதிலும் உணர்வு கொண்டதாய் அமைய வேண்டும். தமிழர் மத்தியில் நிறைய மரபுகள் காணப்படுகின்றன. ஆனால் அவை எவற்றிலும் தேசிய அலையை உருவாக்கும் மரபுகள் காணப்படவில்லை. தமிழர் மத்தியதர வர்க்கம், அரச உத்தியோகம் சார்ந்த வர்க்க நலன் தமிழ் தேசியத்தை முழுமையாகவோ இலட்சிய நோக்குடனோ கட்டமைக்க உதவத் தவறியது. பதவி உயர்வு, இடமாற்றம் போன்ற தேவையின் நிமித்தம் அரசின் அனுகூலங்கள் நிமித்தமும் தமிழ் தேசியத்தை தெளிவாக நேசிக்கத் தவறியது.

அது பற்றிய எழுத்துகளை வெளிக் கொணரத் தவறியது. மறுபக்கத்தில் அரச இயந்திரத்திற்கு சேவை புரிவதிலும் அந்நிய சக்திகளுக்கு உதவுவதிலும் கவனம் கொண்டது. அதனையே தமிழ் தேசியம் என கூறிக் கொள்வதில் கவனம் கொண்டனர். சைவம் இந்துவாக மாறியதன் தோற்றப்பாடே தமிழ் தேசியத்தின் சிதைவுக்கு வழி வகுத்துள்ளது. எனவே தோற்றப்பாட்டு தேசியத்திலிருந்து நவீன தேசியத்திற்குள் நுழைய வேண்டும். வடக்கு, கிழக்கை சமூக பொருளாதார கண்ணோட்டத்திலும் ஜனநாயக மரபுக்குள்ளால் சாமானியனது வாழ்வையும் அரசியல் அதிகாரத்தையும் முதன்மைப்படுத்தி சம பங்காளியாக்க வேண்டும். நிலமனிய மரபுகளையும் முடி மன்னர்களின் வாள்களையும் வீரத்தையும் மதவாதத்தையும் மத வெறியையும் துடைத்தொழிக்க வேண்டும். இந்திய நலனுக்காக தொடங்கிய ஆயுதப் போராட்டத்தை இந்தியர்களே முடித்து வைத்த துயரத்தை ஈழத்தமிழர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். மீண்டும் ஒரு ஏமாற்றத்திற்கு ஈழத்தமிழர் தயாராவதாகவே தெரிகிறது.

அப்போது ஆயுதத்தால், தற் போது மதத்தால் நிகழப் போவதாகவே உணரப்படுகிறது.பெரியாரது சிந்தனையால் தமிழகத்தை வெற்றி கொள்ள முடியாத மதவாதம் ஈழத்தமிழரை வெற்றி கொள்வது அவமானமாகவே தெரிகிறது.

# இந்தியா மௌனம் காப்பது ஏன்?

இந்தியாவுக்கு அக்கறை இருக்கிறது என்றால் இந்து ஆலயங்கள் அழித்தொழிக்கப்படும் போது ஏன் மௌனமாக இருக்கிறீர்கள்? விரைந்து நடடிக்கை எடுக்க இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தத்தை பிரயோகியுங்கள்'' என அகில இலங்கை இந்துமா மன்றத்தின் உப தலைவர், கலாநிதி ஆறு.திருமுருகன் அண்மையில் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறார்.

வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலயத்தின் சிவலிங்கம் உள்ளிட்ட விக்கிரகங்கள், பிடுங்கியெறியப்பட்டு, அழிக்கப்பட்ட சம்பவத்தை அடுத்தே அவர் இந்த அறிக்கையை வெளியிட்டார். வெடுக்குநாறி மலையைப் போன்றே குருந்தூர் மலையில் இருந்த ஐயனார் ஆலயத்தின் சூலங்கள் பிடுங்கி எறியப்பட்டன. அதற்குப் பின்னர், அங்கு புதிதாக விகாரை ஒன்று கட்டி முடிக்கப்பட்டு விட்டது.



முல்லைத்தீவு நீதிமன்றத்தில் வழக்கு நடந்து கொண்டிருக்க, நீதிமன்றம் புதிய கட்டுமானங்களை மேற் கொள்வதற்குத் தடை விதித்திருக்க, குருந்தூர் மலையில் விகாரை கட்டப்பட்டு விட்டது. தடையை மீறிக் கட்டப்பட்ட விகாரையை நீதிமன்றத்தினால் கூட, ஒன்றும் செய்ய முடியாது. அதே போன்று தான் வெடுக்கு நாறி மலை விவகாரம் தொடர்பாக வவுனியா நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறது. ஆனாலும் அங்கிருந்த ஆதிசிவன் ஆலயத்தின் சிவலிங்கம் உள்ளிட்ட விக்கிரகங்கள் பெயர்த்தெடுக்கப்பட்டு வீசப்பட்டிருக்கின்றன.

கச்சதீவில் புத்தர் சிலைகள் வைக்கப்பட்டது, நெடுந்தீவில் புதிய விகாரை அமைக்க எடுக்கப்படும் முயற்சி, கன்னியா வெந்நீர் ஊற்றுகள், அபகரிக்கப்பட்டமை என்று சிங்கள பௌத்த ஆக்கிரமிப்பு தமிழர் பகுதிகளில், தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இந்த பௌத்த சிங்கள மயமாக்கல் முயற்சிகளை தடுத்து நிறுத்த வேண்டும் என்றே, புதுடில்லியை நோக்கி கோரிக்கை விடுத்திருக்கிறார் ஆறு. திருமுருகன். ஒன்று, அவர் இந்தக் கோரிக்கையை முன் வைத்திருப்பதற்கு இரண்டு பிரதான காரணங்கள் உள்ளன.

இலங்கைத் தமிழர் நலன்களைப் பாதுகாத்து, உறுதிப்படுத்த வேண்டியது தங்களின் பொறுப்பு என்று இந்தியா அடிக்கடி கூறி வந்திருக்கிறது. இரண்டு, இந்தியா முழுவதும், இந்துத்துவ ஆட்சியை நிறுவுகின்ற முயற்சிகளில், மத்தியில் ஆட்சி செய்யும் பா.ஜ.க. அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறது.

இந்த இரண்டு காரணங்களாலும் தான், ஆறு திருமுருகன் அந்த வேண்டுகோளை விடுத்திருக்கிறார். இந்தியாவில் மத மாற்றத்துக்கு எதிரான தீவிர பிரசாரங்களையும், போராட்டங்களையும், பா.ஜ.க.வும் அதன் இந்துத்துவ ஆதரவு அமைப்புகளும் முன்னெடுத்து வருகின்றன. இலங்கையிலும் தங்களின் விழுதுகளைப் பரப்பும் முயற்சிகளில் அவர்கள் ஈடுபட்டுள்ளார்கள்.

இவ்வாறான நிலையில் இலங்கையில் சைவ மக்களின் வழிபாட்டு உரிமைகள், வழிபாட்டு இடங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு அச்சுறுத்தலுக்கு உள்ளாகின்றதை, இந்தியா கண்டு கொள்வதாகத் தெரியவில்லை. இலங்கைத் தமிழர்கள், மதம் கடந்து ஒற்றுமையாக இருப்பதை இந்திய ஆளும் வர்க்கம் வித்தியாசமான கோணத்தில் தான் பார்த்து வந்திருக்கிறது.

விடுதலைப் புலிகள் கிறிஸ்தவர்களை அரவணைத்து தங்களின் போராட்டத்தில் உள் வாங்கியதை இந்தியாவினால் சகித்துக் கொள்ள முடியவில்லை.

இந்திய புலனாய்வுத் துறையினர் மற்றும் அதிகாரிகள் மட்டத்தில், இந்த புறக்கணிப்பு நிலை காணப்பட்டது. இப்போது, இங்குள்ள இந்துக்களின் ஆலயங்கள் பௌத்த விகாரைகளாக்கப்படுவது, அழிக்கப்படுவது தொடர் கதையாக மாறியுள்ள நிலையில் இந்தியா தலையிடாதிருக்கிறது. ஏனென்றால், இந்தியாவின் இந்துத்துவ அதிகார வர்க்கம், பௌத்த சமயத்தை இந்து மதத்தின் ஒரு பிரிவாகவே பார்க்கின்றது. இலங்கை சைவ வழிபாட்டுத் தொன்மையைக் கொண்டது. பா.ஜ.க. இந்துத்துவ கொள்கைகளை பின் பற்றுகிறது. சைவசமய கோட்பாடுகளுக்கும், இந்து சமய கோட்பாடுகளுக்கும் இடையில் வேறுபாடுகள் உள்ளன.

தமிழகத்தில் தோன்றிய நாயன்மார்களும், சைவப் பெரியார்களும், சைவ சமயத்தின் வளர்ச்சிக்கு துணையாக இருந்தனர். இது இந்துத்துவ அமைப்புகளுக்கு பிடிக்காத ஒரு விடயம். அவர்கள் பௌத்த மதத்துடன் இணங்கிப் போகத் தயாராக இருக்கின்றனர். அதைவிட, பௌத்த மத ஆக்கிரமிப்பினால் இந்து மதம் ஆபத்தைச் சந்திக்காது என்பது அவர்களின் நம்பிக்கை.

இது தவிர, தமிழர்களின் ஆலயங்களை பாதுகாப்பதற்காக இலங்கைக்கு அழுத்தங்களைக் கொடுப்பதன் மூலம், இந்தியா தனது மென் சக்தியை வீணடித்து விடக்கூடாது என்ற கருத்தும் புதுடில்லி கொள்கை வகுப்பாளர்களிடம் இருப்பதாகத் தெரிகிறது. தமிழர்களின் நலன்களை உறுதிப்படுத்த முனையும் போது, சிங்கள பௌத்த ஆட்சியாளர்களின் நம்பிக்கையை இழக்க வேண்டி வரும்.

அது அவர்களுக்கும் சீனர்களுக்கும் இடையிலான உறவை வலுப்படுத்தி விடும் என்ற அச்சமும் புதுடில்லியிடம் இருப்பதாகத் தெரிகிறது. இவ்வாறான நிலையில் தான் இலங்கையில் சைவசமய தலங்களுக்கோ, வழிபாட்டுக்கோ அச்சுறுத்தல் ஆபத்து விளைவிக்கப்படும் போது இந்தியா கண்டு கொள்ளாதிருக்கிறது. அண்மைக் காலங்களில் இந்து ஆலயங்களுக்கு ஏற்பட்ட இந்த லையைக் குறித்து இந்தியா வாயைத் திறக்கவேயில்லை.

இந்திய கடல் எல்லைக்கு அருகே கச்சதீவில் புத்தர் சிலைகள் வைக்கப்பட்ட போது கூட, இந்திய பொறுத்துக் கொள்ளாது, பொங்கியெழும், இரு தரப்பு உறவுகளில் பாதிப்பு ஏற்படும் என்றெல்லாம் பலர் நினைத்துக் கொண்டனர்.

ஆனால் இந்தியா அதை பொருட்படுத்தவேயில்லை. தமிழக அரசியல் கட்சிகள் எதிர்ப்புக் குரல் எழுப்பிய போதும் புதுடில்லி வாயையே திறக்கவில்லை. இது இந்தியாவின் மாறுபட்ட அணுகுமுறைகளில் ஒன்று. இதே இந்தியா, கனடா, அவுஸ்திரேலியாவில் இந்து மற்றும் சீக்கிய மத தலங்கள் தாக்கப்பட்ட போது, அல்லது அவமதிக்கப்பட்ட போது, பொறுத்திருக்கவில்லை.

அங்கு இவ்வாறு அடிக்கடி நடக்கின்ற சம்பவங்கள் குறித்து, இந்தியா கண்டனம் தெரிவிக்கிறது. அண்மையில் புதுடில்லியில் உள்ள கனடிய உயர்ஸ்தானிகர் வெளிவிவகார அமைச்சுக்கு அழைக்கப்பட்டு கண்டிக்கப்பட்டார். கனடா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் இந்து ஆலயங்கள் தாக்கப்பட்டதை கண்டிக்கும் இந்தியா, இலங்கையில் அவ்வாறான சம்பவங்கள் இடம் பெறுவதை மாத்திரம் ஏன் கண்டு கொள்ளாதிருக்கிறது.

இது தான் இலங்கைத் தமிழர்களின் மீது, அவர்களின் நலன்களின் மீது இந்தியா கொண்டுள்ள அக்கறையா? இலங்கைத் தமிழர்கள் மீதான இந்தியாவின் அக்கறை, அவர்களின் வாழ்விடங்கள் அபகரிக்கப்பட்ட போது வெளிப்படவில்லை.

தமிழர்களின் பூர்வீக காணிகள் அடாத்தாக ஆக்கிரமிக்கப்பட்டு, அங்கிருந்து அவர்கள் வெளியேற்றப்பட்ட போது, வெளிப்படவில்லை. தமிழர்களின் பாரம்பரிய வழிபாட்டு இடங்களும், ஆலயங்களும் உடைத்தெறியப்பட்டு விக்கிரகங்கள் தூக்கி வீசப்பட்ட போதும், வெளிப்படவில்லை.

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்




தமிழர்களின் அரசியல் உரிமைகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் சரி, வாழ்வியல் உரிமைகள் நசுக்கப்பட்ட போதும் சரி, இந்தியா தலையீடு செய்யவில்லை. இந்த நிலை தான் தமிழர்கள் இந்தியா மீது சந்தேகம் கொள்வதற்கு காரணம். இந்தியா மீது தமிழர்கள் நம்பிக்கை வைத்திருந்த போதும், கடந்த காலங்களில் இந்தியா அந்த நம்பிக்கையை முழுமையாக பாதுகாக்க தவறியிருக்கிறது. போர்க்காலத்திலும் சரி போருக்குப் பின்னரும் சரி, தமிழர்களின் நலன்கள் மீது அக்கறை கொண்டு இந்தியா எத்தகைய தலையீட்டைச் செய்திருக்கிறது? அது ஒருபோதும் தமிழர்களுக்கு சார்பானதாக இருக்கவில்லை. அப்போதும் அப்படித் தான் இப்போதும் அப்படித் தான்.

சிவமயம்




ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?





மேடராசி அன்பர்களே1 சுப நிகழ்ச்சிகள் தங்கு தடையின்றி நடக்கும். நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த காரியங்களில் வேகம் பிறக்கும். வீடு, வாகனம் மூலம் செலவுகள் ஏற்படலாம். சமூகத்தில் மதிப்பும், மரியாதையும் கூடும். தொழில் வியாபாரத்தில் புத்தி சாதூரியத்தால் முன்னேற்றம் காண்பீர்கள். உத்யோகத்தில் நிர்ப்பந்தமாக இடமாற்றம் அல்லது பணிமாற்றம் இருக்கலாம். குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் குறையும்.





ரிஷபராசி அன்பர்களே! எந்த காரியத்திலும் இருந்து வந்த தடை தாமதம் நீங்கும். வீண் பிரச்னைகள் அகலும். நண்பர்கள் உறவினர்களுடன் நீடித்து வந்த மன வருத்தம் நீங்கும். பயணங்கள் செல்ல நேரிடும். கூட்டு தொழில் அல்லது வியாபாரம் செய்பவர்கள் கவனமாக இருப்பது நல்லது. உத்யோகத்தில் வீண் அலைச்சல் உண்டாகும். வேலைப் பளு கூடும். குடும்பத்தில் அடுத்தவர்களால் ஏதேனும் குழப்பம் உண்டாகலாம்.





மிதுனராசி அன்பர்களே! பொருள் வரத்து அதிகரிக்கும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். நண்பர்கள் மூலம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்கள் அனுகூலமாக நடந்து முடியும். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் இடமாற்றம் உண்டாகலாம். குடும்பத்தில் இருந்த சண்டைகள் நீங்கும். கணவன், மனைவிக்கிடையே இருந்த இடைவெளி குறையும்.





கடகராசி அன்பர்களே! வாக்கு வன்மையால் காரிய அனுகூலம் உண்டாகும். தேவையான நேரத்தில் மற்றவர்களின் உதவி கிடைக்கும். புதிய சொத்து வாங்குவதில் கவனம் செல்லும். தொழில் வியாபாரம் முன்னேற்றமடைய தேவையான உதவிகள் கிடைக்கும். திறமையான பேச்சின் மூலம் உத்யோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகள் சொல்வதை செய்வதன் மூலம் நன்மை கிடைக்க பெறுவர். குடும்பத்தில் அமைதி ஏற்படும்.




சிம்மராசஜ அன்பர்களே! காரியங்களில் இருந்து வந்த தடை தாமதம் நீங்கும். புதிய வீடு வாகன சேர்க்கை உண்டாகும். மனதில் இருந்த குழப்பங்களுக்கு விடை கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த மந்த நிலை மாறும். பழைய பாக்கிகள் வசூலாகும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சலும், வேலை பளுவும் ஏற்படலாம். வார்த்தைகளில் நிதானம் அவசியம்.




கன்னிராசி அன்பர்களே! எல்லா காரியங்களிலும் அதிக முயற்சி மூலம் வெற்றி கிடைக்கும். கடன் பிரச்னை தீரும். தகராறு, வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். மறைமுக எதிர்ப்புகள் விலகும். கவுரவம் அதிகரிக்கும். மறைமுக நோய் நீங்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் நீங்கும். பழைய பாக்கிகள் வசூ லாகும். உத்யோகத்தில் வேலைப் பளு குறையும். முயற்சிகள் காலதாமதமாக பலன் கொடுக்கும்.




துலாம்ராசஜ அன்பர்களே! சுபச் செலவு அதிகரிக்கும். வாகனங்கள் பயன்படுத்தும் போது கவனம் தேவை. சிலருக்கு இடமாற்றம் உண்டாகலாம். நண்பர்கள் மூலம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த மந்த நிலை நீங்கும். உங்களது பொருட்களை வாடிக்கையாளர்களுக்கு அனுப்பும் போது கவனம் தேவை. உத்யோகத்தில் அடுத்தவரை நம்பி பொறுப்புக்களை ஒப்படைப்பதை தவிர்ப்பது நல்லது. பெண்கள் அடுத்தவருக்கு உதவி செய்யும் போது கவனம் தேவை.





விருச்சிகராசி அன்பர்களே! எதையும் சாதிக்கும் திறமையும், சாமர்த்தியமும் அதிகமாகும். புதிய நண்பர்கள் கிடைப்பதுடன் அவர்களால் நன்மையும் உண்டாகும். மரியாதை கூடும். தன்னம்பிக்கையுடன் செயலாற்றுவீர்கள். தொழில் வியாபாரம் முன்னேற்ற பாதையில் செல்லும். தேவையான பண உதவியும் கிடைக்கும். கடன் தொல்லை குறையும். தொழில் போட்டிகள் நீங்கும். உததியோகத்தில் எதிர் பார்த்த பதவி உயர்வு கிடைக்கும்.








தனுசுராசி அன்பர்களே! எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும். தடைகள் அனைத்தையும் தகர்ப்பீர்கள். உடல் ஆரோக்கியத்தில் இருந்த மந்த நிலை மாறும். பணவரவு நிதானமாக இருக்கும். மற்றவர்கள் உங்கள் மேல் கொண்டிருந்த கோபம் அகலும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். புதிய தொழில் ஆரம்பிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். உத்யோகத்தில் இருப்பவர்கள் நிதானம் தேவை.




மகரராசி அன்பர்களே! தேவையற்ற வீண் படபடப்பு ஏற்படும். நீண்ட நாட்களாக வாங்க வேண்டும் என்று எண்ணியபொருட்களை வாங்குவீர்கள். தொழில் வியாபாரம் தொடர்பாக இருந்து வந்த குழப்பங்கள் நீங்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் திட்டமிட்டு காரியங்களை செய்து எதிர்பார்த்த வெற்றியை அடைவார்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். கணவன், மனைவிக்கிடையில் நெருக்கம் உண்டாகும்.




கும்பராசி அன்பர்களே! வீண் மனக்கவலைகள் நீங்கும். கனவு தொல்லைகள் உண்டாகும். பணவரத்து திருப்தி தரும். நண்பர்கள் மூலம் உதவி கிடைக்கும். ஆடம்பர செலவுகள் ஏற்படும். தொழில் வியாபாரம் திருப்திகரமாக நடக்கும். தொழிலை விரிவுபடுத்துவதற்கான செயலில் ஈடுபடுவீர்கள். உத்யோகத்தில் இருப்பவர்கள் கடுமையாக உழைக்க வேண்டி இருக்கும்.




மீனராசி அன்பர்களே! எல்லா முயற்சிகளும், காரியங்களும் சாதகமான பலன் தரும். மனதில் இருந்த தயக்கம், பயம் நீங்கும். வெளியூர், வெளிநாடு பயணங்கள் செல்ல எடுக்கும் முயற்சிகள் சாதகமாக முடியும். தொழில் வியாபாரம் முன்னேற்றமடையும். லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் பதவி உயர்வும் கூடுதல் பொறுப்புகளும் கிடைக்கும். வர வேண்டிய பணம் வந்து சேரும். குடும்பத்தில் மகிழ்ச்சியான நிலை காணப்படும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

## அரசியலில் தந்திரோபாயம் என்பது....

(17ம் பக்கத் தொடர்ச்சி) விசேட பிரதிநிதியாகவும் இருந்த, பார்த்தசாரதி, அனைத்து இயக்கங்களின் தலைவர்களுக்கும் ஒரு விடயத்தை தெளிவாகக் கூறியிருந்தார். அதாவது, இந்தியா ஒரு போதும் தனிநாட்டை ஆதரிக்காது, அத்தோடு அதனை அனுமதிக்கவும் மாட்டாது.

உள் தகவல்களின்படி, பார்த்தசாரதி முதல் முதலாக கொழும்பிற்கு வருகின்ற போது சமஷ்டியடிப்படையிலான அரசியல் தீர்வு யோசனையுடன் தான் வந்திருக்கின்றார். ஆனால் கொழும்பில் நின்ற நாட்களில் அவரது பார்வை முற்றிலும் மாறி விட்டது. எங்கள அரசியல் கட்சிகளின் தலைவர்கள், இராஜதந்திரிகள், புத்திஜீவிகள் பலரோடு பேசியதைத் தொடர்ந்து, சமஷ்டித் தீர்வை நடைமுறைப்படுத்துவதிலுள்ள சிக்கல்களை அவர் புரிந்து கொண்டார். இதனைத் தொடர்ந்து தான், இந்தியாவின் மாநில முறைமையிலான தீர்வை முன்வைக்கும் திட்டத்தை இந்தியா கையிலெடுத்தது.

அந்த அடிப்படையில் வந்தது தான் இன்று வரையில், இலங்கையில் நிலைத்து நிற்கின்றது. நமக்குள் பேசு பொருளாக இருக்கின்றது. நமக்குள் எவ்வாறான விவாதங்கள் இருந்தாலும் கூட அதனைத் தாண்டி நம்மால் பயணிக்க முடியவில்லையென்பது தான் உண்மையானது. இந்த உண்மையை உணர்ந்து செயற்பட்டால் மட்டுமே ஏழை தமிழ் மக்களுக்கு விமோசனமுண்டு. மாகாண சபையை விட்டால் ஈழத்தமிழர்களுக்கு வேறு வழியில்லை.

ஆனால், அதனைக்கூட முழுமையாக நடைமு றைப்படுத்துவதற்கே இந்தியாவின் மேற்குலகத்தின் அழுத்தங்கள் தேவைப்படுகின்றது. இது தான் இலங்கைத்தீவின் அரசியல் யதார்த்தம். சில யதார்த்தங்கள் நமக்குப் பிடிக்காமல் இருக்கலாம். ஆனால் அவைகள் யதார்த்தம் என்பதை நம்மால் புறக்கணிக்க முடியாதது என்பதே அந்த யதார்த்தத்தின் யதார்த்தமாகும்.

## ஈஸ்டர் தாக்குதலுக்கான நீதி?

(5ம் பக்கத் தொடர்ச்சி) எண்ணிக்கையில் சிறுபான்மையினரின் ஆதரவில்லாமல் வெற்றி பெறுவதற்கான சூழலை உருவாக்கியது. ஈஸ்டர் தாக்குதலால் நன்மையடைந்த நபரென்றால் அது கோட்டாபய ராஜபக்ஷ மட்டும் தான் வேண்டுமானால் மகிந்த குடும்பத்தையும் சொல்லலாம்.

அதே போன்று ராஜபக்ஷ குடும்பத்தை இலக்கு வைத்து செயற்பட்ட 'அரகலய' கிளர்ச்சியால் நன்மையடைந்த ஒருவரென்றால் அது ரணில் விக்கிரமசிங்க மட்டும் தான்.

ஈஸ்டர் தாக்குதலால் ஆட்சியை இலகுவாக கைப்பற்றிய கோட்டாபய, அரகலயவினால் விரைவாக கதிரையை இழந்து போனார்.

## வலு கட்டாயமாக விக்கிரகங்கள் வைக்க..

(6ம் பக்கத் தொடர்ச்சி) உரிமைகள் பற்றி பேச முடியாது இவ்வாறு பெரும் நெருக்கடிகளை தோற்றுவித்து மக்களை ஒரு நெருக்கடி நிலைக்குள் தள்ளி கொடுங்கோல் ஆட்சி மேற்கொள்ளவே இந்த அரசாங்கம் முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஏலத்தில் விற்கப்பட்ட இலங்கைப் பெண்கள் விசாரணைகளை ஆரம்பித்தது ஐ.நா

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார். மனித உரிமைகள் மீறல்கள் குறித்து அவர் அதில் சுட்டிக்காட்டியுள்ளார். இலங்கை அரசாங்கம் 60 நாட்களிற்குள் பதிலளிக்க வேண்டும் என்ற போதிலும் இதுவரை அரசாங்கம் பதிலளிக்கவில்லை.

ஜனாதிபதிக்கான குறிப்பிட்ட கடிதத்தில் கைச்சாத்திட்டுள்ள இரண்டு விசேட அறிக்கையாளர்களும் ஓமானிற்கு பாலியல் நோக்கத்திற்காக அல்லது தொழில் ரீதியான துஸ்பிரயோகத்திற்காக கொண்டு செல்லப்பட்ட பெண்கள் எதிர்நோக்கும் மனித உரிமை மீறல்கள் குறித்து சுட்டிக் காட்டியுள்ளனர்.

சுற்றுலா விசாவில் ஓமானிற்கு சென்ற 90 பெண்கள் இலங்கை அரசாங் கத்தின் புகலிட இல்லம் உட்பட புகலிட இல்லங்களில் சிக்குண்டனர் என தமக்கு கிடைத்துள்ளதாக அவர்கள் அந்த கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

பல பெண்கள் ஓமானிற்கு பாலியல் நோக்கத்திற்காக அல்லது தொழில் ரீதியான துஸ்பிரயோகத்திற்காக கடத்தப்பட்டுள்ளனர் என தகவல்கள் கிடைக்கின்றன ஐக்கிய அரபு இராச்சியத்தில் தொழில்வாய்ப்பு என்ற போர்வையிலேயே இவர்கள் கொண்டு செல்லப்பட்டுள்ளனர் எனவும் ஐநாவின் அறிக்கையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சில பெண்கள் ஏலத்தில் விடப்பட்டனர் தனியார் வீடுகளில் வைக்கப்பட்டு துஸ்பிரயோகங்களிற்கு உட்படுத்தப்பட்டனர் போதுமான உணவோ அல்லது உறங்குவதற்கான வசதிகளோ இருக்கவில்லை எனவும் ஐநாவின் அறிக்கையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## போதைக்கு அடிமையான பல்கலைக்கழக மாணவர்களுக்கு உளவள சிகிச்சை!

தடை செய்யப்பட்ட போதை மாத்திரைகளை உட்கொண்டார்கள் என்ற சந்தேகத்தில் பொலிஸாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களை உளவளத் துணைச் சிகிச்சைக்கு அனுப்புவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் பு. ரவிராஜன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் — கந்தர்மடம், பழம் றோட்டுப் பகுதியில் உள்ள தனியார் மாணவர் விடுதி ஒன்றில் தங்கியிருந்த சமயம், பொலிஸார் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் போது, தடை செய்யப்பட்ட போதை மாத்திரைகளை உட்கொண்டமை மற்றும், போதை மாத்திரை வெற்று உறைகள் கைப்பற்றப்பட்டமை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டுப் பின்னர் பல்கலைக்கழக அதிகாரிகள் முன்னிலையில் விடுவிக்கப்பட்ட மாணவர்களில், போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் சில மாணவர்களை உளவளத் துணை சிகிச்சைக்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

## Family Law
- Divorce
- Custody & Support

## Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

## Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

## Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

## Sasitharan Law Professional Corporation
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca



Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.


## *At Need Funeral Arrangements*
We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com



மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு
வாங்க..
விற்க..
Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6


RANJANI
THIRUKESWARAN
LAW OFFICE
• Real Estate: வீடு, காணி கொள்வனவு விற்பனைச் சட்டம்
• Business Law: வியாபார, வர்த்தகச் சட்டம்
• Immigration Law: குடிவரவு, அகதிச் சட்டம்
• Family Law: குடும்ப வழக்குகள்
• Last Wills: உயில் தயாரித்தல்
• Power of Attorney: தத்துவப் பத்திரம் தயாரித்தல்
2855 Markham Road Suite 209
Toronto -ON- M1X 0C3
(Markham / McNicoll )
416 291 2242
Ranjani Thirukeswaran
(Barrister & Solicitor)


TAX CENTRIC
Gayatiri Thavan
Tel: 289.569.0169 • Fax: 289.569.0167
Email: taxcentric@outlook.com
www.taxcentric.ca
2338 HURONTARIO ST., UNIT 100A, MISSISSAUGA, ON L5B 1N1
உங்கள் கணக்கியல் வருமானவரி சம்பந்தமான தேவைகளுக்கு அனுபவமுள்ள எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்
Tel: 289.569.0169
Servicing Clients from Mississauga, Brampton, Hamilton, St. Catharines, Niagara, Kitchener, Cambridge and Guelph
Personal Tax
Corporate Tax
Book Keeping & Accounting
Payroll Services
GST/HST Filing
Corporate Services
Business Startup
Financial Planning


OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE
ARVIN-KING
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*


RENOWNED FOR
AUTHENTIC KANCHIPURAM
SILK SAREES
$599*
FLAT RATE
Aalayaa
2 VILLA ADA DRIVE,
MARKHAM, ON L6B 1N7
1.855.575.0500


உங்களிடம் ..
திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய கடன் இருக்கிறதா?
வணிக உரிமையாளர்களுக்கும் சுயதொழில் செய்வோருக்கும் மகிழ்ச்சியான செய்தி!
உங்கள் வருமான மதிப்பீடுகள் இல்லாமல் மாதந்தோறும் $5000 வரை அங்கவீனக் காப்பீட்டுத் தொகையைப் பெற முடியும்.
விபரங்களுக்கு அழையுங்கள்
அஜித் சபாரட்ணம்
647-401-5800
416-439-2800
10 Thornmount Dr, Scarborough, ON M1B 3J4.